Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். (சி-9956) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–12 | 28–08–2004 | சனிக்கிழமை | ஓசை –192

## சிறிலங்காவை விட்டு வெளியேறுமாறு நோர்வேயிடம் சிங்களக்கட்சிகள் கோரிக்கை

சிறிலங்காவைவிட்டுநோர்வே வெளியேறவேண்டுமென சிங்களத் தேசப் பற்றாளர் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் பங்காளிகளான மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச உள்ளிட்ட பல இனவாத அரசியல் பிரமுகர்களால் கையெழுத்திடப்பட்டு நோர்வே பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

இலங்கை சமாதான நடவடிக்கையில் ஏற்பாட்டாளர் நிலையிலிருந்து நோர்வே விலகிக் கொள்ளவேண்டுமெனக் கோரியே இவர்கள் இக் கடிதத்தினை அனுப்பியுள்ளனர்.

நோர்வேஜியப் பிரதமர் மக்னே பொண்டவிற்கு அனுப்பியுள்ள இக் கடிதத்தில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அரசு புலிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கவில்லை!

### புலிகளுக்கு பயிற்சி அளித்ததான குற்றச்சாட்டிற்கு மறுப்பு

நோர்வே அரசாங்கம் ஒரு போதும் புலிகளுக்கோ வேறு எந்த ஆயுதம் தாங்கிய இயக்கத்திற்கோ இராணுவப் பயிற்சியை அளிக்கவில்லையென கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது; புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி நோர்வேயிலுள்ள ரெனா இராணுவ முகாமிற்கு விஜயம் செய்தமை ஸ்கண்டினேவிய நாடுகளில் குழு மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் ஓர் அங்கமாகவே இருந்ததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் சுற்றுப்பயணம் சனநாயக ஆட்சி முறையின் அம்சங்கள் பற்றியும் மற்றும் ஆண், பெண் சமத்துவம் சனநா

(14ஆம் பக்கம் பார்க்க)


# கனேடிய சமஷ்டி அமைப்பின் தலைவர் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் பேச்சு!

### சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைகுறித்து ஆராய்வு

**சமஷ்டி அமைப்பின் தலைவரும் முன்னாள் ஒன்ராரியோ முதல்வருமான பொப்ரோ அவர்கள் நேற்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.**

கனடிய அரசியல் விஞ்ஞான பீடப் பேராசிரியர் கலாநிதி டேவிட் கமரூன் அவர்களும் இச் சந்திப்பில் பொப்ரேயுடன் கலந்து கொண்டார். தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படுவதன் அவசியம் குறித்து பொப்ரே விரிவாக விளக்கமளித்ததாகவும், இருதரப்பினரிடையேயான பேச்சுக்கள் மூலம் மட்டுமே இப்பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்படலாம் என்பதை மையப்படுத்தியே பேச்சுக்கள் நடைபெற்றதாகவும் தெரிய வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற இத்தகைய சந்திப்பின் அடுத்த கட்டமாகவே இச்சந்திப்பு கருதப்பட்டதாகவும், இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் சர்வதேச நாடுகளின் கருத்தும் விளக்கமும் என்ன என்பதைத் தெளிவாக்குவதே இவர்களது முதன்மையான நோக்கமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதற்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச்செல்வன், தமது தரப்பு மிக நேர்மையுடனும் தெளிவுடனும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டதுடன், மக்களின் அடிப்படைத்தேவைகளை முதலில் கவனத்தில் எடுப்பதற்காக மட்டுமே இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த திட்டமொன்றை

(14ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கு கிழக்கு மனித உரிமை செயலக தலைவருடன் கனேடியக் குழு சந்திப்பு

(கிளிநொச்சி)

சமஷ்டி அமைப்பின் தலைவரும் முன்னாள் ஒன்ராரியோ முதல்வருமான பொப்றோ, கனேடிய அரசியல் விஞ்ஞானப்பேராசிரியர் கலாநிதி டேவிட் கமரூன் அவர்களும் நேற்று கிளிநொச்சியில் வடக்குக்கிழக்கு மனித உரிமைச்செயலகத்தலைவர் வண.கருணாரட்ணம் அவர்களை வடக்குக் கிழக்கு மனித உரிமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது வண. கருணாரட்ணம் அவர்கள் வடக்குக்கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். இச்சந்திப்பு இவ்வமைப்பின் வன்னிக்கான விஜயத்துடன் இணைந்ததாக அமைந்துள்ளது. இவ்வமைப்பினர் மனித உரிமை ஆணைக்குழுவுடன் தமது பொறுப்புக்கள் பற்றி வெளிப்படுத்தியதோடு மனித உரிமைச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் தொடர்பானமுன்னேற்றப்பாதுகாப்பு நடவடிக்கைகளை வரவேற்றார்.

### -ஓமந்தை சோதனைச் சாவடியில்-

## பாராளு.உறுப்.ஈழவேந்தன் 1½ மணி நேரம் தடுக்கப்பட்டார்!

(வடமராட்சி)

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் ஓமந்தை இராணுவச்சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் சுமார் ஒன்றரை மணிநேரம் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

தனது குடும்பத்தவர்களுடன் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிக

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.பிரமுகர் மொறகொட நோர்வேயுடன் ரகசியப் பேச்சு

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களில் கலந்து கொண்டவரும் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இணையத்தளச் செய்திக்குறிப்பொன்றில் இந்த விடயம் குறித்துத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வார முற்பகுதியில் நோர்வே பிரதிநிதிகளுக்கும் மிலிந்த மொறகொடவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்றுள்ளதாக அந்த இணையத்தள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட அழைப்பின் பேரில் நோர்வேக்கு விஜயம் செய்த மிலிந்த மொறகொட அங்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல், கிளி. யில் சிறப்புடன் நடைபெற்ற லெப்.கேணல் ராஜனின் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


யாழ் மாதகலிலும் கிளிநொச்சியிலும் லெப். கேணல் ராஜனின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. மாதகல் மண்ணில் வித்தாகிப்போன சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியும் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளருமாகிய லெப். கேணல் ராஜனின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் மாதகல் மண் தந்த வீர மறவர்களின் நினைவு நிகழ்வும் நேற்றுமாலை 5.30 மணியளவில் மாதகலில் நடைபெற்றது.

முன்னதாக இராஜனினதும்

(14ஆம் பக்கம் பார்க்க)



மாதகலில்



கிளிநொச்சியில்

## வரிவிளம்பரம்

### ஆதவன் கல்வி நிலையம்

G.C.E.A/L பரீட்சை எழுதிய வர்த்தகப்பிரிவு மாணவர்களிற் கான விசேட மீட்டல் வினாவிடை வகுப்புக்கள் 28.08.2004 சனி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது. வழமையான ஆசிரியர் குழு.
நிர்வாகி. (4994)

## பசுவைக் காணவில்லை

வள்ளிபுனம், இடைக்கட்டு, இல.32, இ.பத்மசேகர் ஆகிய எனது கேப்பை இனப் பசுமாடு பளுப்பு வெள்ளை, பெரிய கொம்பு, காது ஒன்று துண்டிக்கப்பட்டுள்ளது, 7 மாத கண்டுத்தாச்சி. மேற்படி அடையாளமுடைய பசுவை கடந்த 25.08.2004 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் மேற்கூறிய விலாசத்தோடு தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

(5011) தகவல் இ.பத்மசேகர்.


## சாவு அறிவித்தல்



### இராசேந்திரம் வரதராசா

முள்ளியவளையைச் சேர்ந்தவரும், முன்னாள் வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரியுமான இராசேந்திரம் வரதராசா காலமானார். அன்னார் இராசேந்திரம் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும்; புஸ்பமலரின் அன்புக்கணவரும்; நந்தகுமார் (ஜேர்மனி), கல்யாணி (வாணி), தமிழ்ப்பரிதி (போராளி), குகாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும்; விஜிதாதேவி (ஜேர்மனி), மணிமாறன் (போராளி) ஆகியோரின் அன்பு மாமனும்; இளவரசி, கலையரசி, வினோஸ், அபிசேகன் ஆகியோரின் அன்புப்பேரனும்; இரத்தினத்தின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.08.2004 ஞாயிறு பகல் 12.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
**மகன் தமிழ்ப்பரிதி,**
**(செந்தூரன்)**
**முள்ளியவளை.**

(5009)

## மனிதவள மேம்பாட்டுப்பகுதி
## நிதித்துறை

## தமிழ் ஆசிரியப் பணிக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ முழுநேரமாகவோ தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கக்கூடிய இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01.தகைமைகள்:-
1. பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்.
2. தமிழ்ப் பட்டதாரிகள்.
2. பண்டிதர், புலவர் பட்டங்கள் பெற்றோர்.

02. பட்டறிவு:- பத்தாண்டுகளுக்குக் குறையாத தமிழ் ஆசிரியப்பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03. அகவை:- 40 தொடக்கம் 65வரை.

04. வேண்டுகை முடிவு நாள்:- 15.09.2004

05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:-

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

06. நேர்முகத் தேர்விற்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தரவேண்டும்.

07.சம்பளம்:- முழுநேர ஆசிரியராகத் தெரிவு செய்யப்படுவோருக்கு தகைமைக்கும் பட்டறிவிற்கு மேற்ப பத்தாயிரம் உரூபாவிற்குக் குறையாச் சம்பளம் வழங்கப்படும்.

08.நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் தங்களின் தபால் முகவரிக்குக் கடிதமூலம் அனுப்பிவைக்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி-10203)

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

1.பணிநிலை :- கணக்கு எழுதுனர்
★ தகைமை :- க.பொ.த.உயர்தரத்தில் வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3300-4300}{10X100} + 2000$

2.பணிநிலை :- விலை மதிப்பீட்டாளர் - (புடைவை, இலத்திரனியல், ஊர்தி உதிரிகள்) (ஒப்பந்த அடிப்படையில்)
★ தகைமை :- 01. ஆண்டு-08
02. குறிப்பிட்ட துறையில் 05 ஆண்டுகள் பட்டறிவு.
★ சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

3.பணிநிலை :- ஆய அலுவலர் (ஆண்கள்)
★ தகைமை :- க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3630-4730}{10X110} + 2000$

4.பணிநிலை :- ஆய உதவியாளர் (ஆண்கள்)
★ தகைமை :- க.பொ.த சாதாரணதரத்தில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3080-4180}{10X110} + 2000$

5.பணிநிலை :- அலுவலக உதவியாளர்
★ தகைமை :- ஆண்டு - 8
★ சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

6.பணிநிலை :- சமையலாளர்
★ தகைமை :- குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{4210-5410}{10X120} + 2000$

7.பணிநிலை :- சமையல் உதவியாளர்
★ தகைமை :- குறிப்பிட்ட பணியில் பட்டறிவு இருத்தல் வேண்டும்.
★ சம்பள அளவுத்திட்டம்:- $\frac{2830-3930}{10X110} + 2000$

தகுதியுடையவர்கள் 2004.09.07 ஆம் நாள் காலை 10.00 மணிக்குத் தன்வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.

மனிதவள மேலாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-10099)

# பிரி.பாராளுமன்றில் பிரதமருக்கெதிராக கண்டனத்தீர்மானம் கொண்டுவரமுயற்சி

(லண்டன்)

**ஈராக் மீது போர் தொடுத்ததைக் கண்டித்து பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பிரதமர் ரொனிபிளேயருக்கெதிராக தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.**

.அவர்களில் பெரும்பாலானவர்கள் வெல்ஷ் மற்றும் ஸ்காட்டிஷ் தேசியவாதிகள் ஆவார்கள். 2 பேர் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள். பிரதமர் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவர வகை செய்யும் சட்டம் கடைசியாக 150 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டது. 1848 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் உபயோகப்படுத்தப்பட்டது. கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் சட்டம் வெற்றிகரமாக 1806 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டு, ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்தது.

1967 ஆம் ஆண்டு பாராளுமன்றக் குழு கண்டனத்தீர்மானம் கொண்டுவரும் உரிமையை கைவிடுவதற்கு பரிந்துரை செய்தது. ஆனால் இந்தப் பரிந்துரை செயற்படுத்தப்படவில்லை.

இப்போது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, பிளேயரைக் கண்டிக்க 11 எம்.பி.க்கள் திட்டமிட்டுள்ளனர். இந்தக் கண்டனத் தீர்மானம் வெற்றி பெறாது என்றபோதிலும். இதற்குப் பதில் அளிக்க வேண்டிய விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயம் பிளேயருக்கு ஏற்பட்டுள்ளது.

"தவறான தகவலை பாராளுமன்றத்திற்கு கொடுத்து, பொருட்சேதம், உயிர்ச்சேதம் ஏற்படுத்திவிட்டு தப்பித்து விடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று அந்த எம்.பி.க்கள் கூறியுள்ளனர்



கிழக்கு பாக்தாத்தில் அல்சதார் நகரில் ரோந்து சுற்றும் அமெரிக்க பீரங்கிவண்டிகள்.



ஈராக்கின் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்குமிடையில் சமாதானம் எட்டப்பட்டுள்ளதாக செய்திகள் கிடைக்கும் நிலையில் நஜாப்பில் ரோந்துப்பணியில் ஈடுபடும் ஈராக்கியப் பொலிசார்.

# 7 பணயக்கைதிகள் விவகாரம் தொடர்ந்து இழுபறியில்

இந்தியர்கள் மூவர் உட்பட ஏழு பணயக் கைதிகள் விவகாரத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. ஏழுபேரையும் விடுதலை செய்வதானால் குவைத் நிறுவனம் ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டும் எனும் ஒரேஒரு நிபந்தனையை மட்டுமே தற்போது தீவிரவாதிகள் விதித்துள்ளனர். ஏனைய நிபந்தனைகளைக் கைவிட்டுள்ளதாகவும் அவர்கள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிபந்தனையை ஏற்பதாகக் குவைத் நிறுவனம் அறிவித்துள்ளது. குவைத் நிறுவனம் வெளியேறிய மறுநிமிடம் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் பணயக் கைதிகள் ஏழுபேரும் நலமுடன் இருப்பதாகவும் வீடியோ மூலம் அவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். இதனை அல்-அஜீரா தொலைக் காட்சி நேற்று முன்தினம் ஒளிபரப்புச் செய்துள்ளது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இந்தியர்கள் உட்பட ஏழுபேரையும் ஈராக் தீவிரவாதிகள் கடத்திச் சென்றதுடன் கடுமையான நிபந்தனைகளையும் விதித்திருந்தனர்.

ஈராக்கைவிட்டு குவைத் நிறுவனம் வெளியேறும் அதேவேளை பலூஜாவில் அமெரிக்கப் படையினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்பதும் அவர்களது கடுமையான நிபந்தனையாக இருந்தது.

இதனைக் குவைத் நிறுவனம் ஏற்றுக்கொள்ளப் பின்னடிப்புச் செய்தமையினால் பேச்சுவார்த்தைகள் நல்ல பலனைப் பெற்றுக் கொடுக்கவில்லை. இந்நிலையில் தான் தீவிரவாதிகள் தமது கடும் நிபந்தனைகளைத் தளர்த்தியுள்ளனர்.

இதேவேளை ஈராக்கைவிட்டு உடனடியாக வெளியேறுவதாகக் குவைத் நிறுவனம் (வீடியோ) ஒளிப்பதிவு நாடாமூலம் அறிவித்துள்ளது. எனவே இந்தியர் உள்ளிட்ட ஏழுபேரும் விரைவில் விடுதலையாவது உறுதியாகி விட்டதாக இந்திய உள்துறை இணையமைச்சர் அகமட் கூறியுள்ளார்.

# பனாமாவுடனான இராஜதந்திர உறவை கியூபா துண்டித்தது

கியூபா அரசாங்கம் பனாமாவுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துள்ளது. கியூபா தலைவரைப் படுகொலை செய்ய முயன்றதாக பனாமா கைது செய்திருந்த நான்கு பேரையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்ததையடுத்தே கியூபா பனாமாவுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துள்ளது.

பிடல்கஸ்ரோவைக் கொல்ல முயன்றோரைத் தாம் மனிதாபிமானஅடிப்படையில் விடுதலை செய்ததாக பனாமா சனாதிபதி நிராயாமொஸ் கொத்தோவா கூறியுள்ளார்.

ஆனால் மொஸ்கொத்தோ பயங்கரவாதத்தைப் பாதுகாப்பவர் என்ற கியூபா அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னா பிடல்காஸ்ரோ பனாமாவை பல்கலைக்கழகத்தில் உரையாற்ற இருந்த அரங்கைக் குண்டு வைத்துத் தகர்க்க முயன்றதாக ஆறு பேர் பனாமாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இரண்டு பேரை ஏற்கனவே பனாமா விடுதலை செய்துள்ள நிலையில் தற்போது ஏனைய நான்கு பேரையும் விடுதலை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# கைதான தட்சரின்மகன் நேற்று பிணையில் விடுதலை

**–புரட்சிக்காரருக்கு உதவியதாகக் குற்றச்சாட்டு**

கென்யாவில் ஆட்சிக்கெதிரான புரட்சிக்காரருக்கு உதவியதாகக் கூறி இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்க்கிறட் தட்சரின் மகன் தென்னாபிரிக்க தலைநகர் கேப்டவுனில் பொலிசாரால் கைது செய்யபட்டு நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். தென்னாபிரிக்கத் தலைநகர் கேப்டவுனில் முன்னாள் இங்கிலாந்து பிரதமர் மார்க்கிறட் தட்சரின் மகன் மார்க் தட்சர் வசித்து வருகிறார். இவர் கென்யாவில் சமீபத்தில் நடந்த புரட்சியில் புரட்சிக்காரர்களுக்கு நிதி திரட்டித் தந்ததாகவும் அதற்கு தர்க்க அல்லது சட்டரீதியாக உதவி புரிந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு "ஸ்கார் பியன்ஸ்" என்ற பொலிஸ் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். மேலும் வெளிநாட்டு இராணுவ உதவி ஒழுங்கு முறைச் சட்டத்தை மீறிய தாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு 'ஸ்கார் பியன்ஸ்' பொலிசார் விசாரணை நடத்தினார்.

கேப்டவுனிலுள்ள மார்க்தட்சரின் வீட்டில் சோதனை நடத்திய இந்த 'ஸ்கார் பியன்' பொலிசார் அவரை அங்கே கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இதனையடுத்து நீதிமன்று இவரை நேற்று பிணையில் விடுதலை செய்துள்ளது.

# கிழக்காசிய நாடுகளைவிட தெற்காசிய நாடுகள் பொருளாதார அபிவ்ருத்தியில் பின்னடைவிலுள்ளன

**–ஊழல் செயற் திறனின்மை காரணமென்கிறார் பாக். மத்தியவங்கித் தலைவர்**

(இஸ்லாமாபாத்)

கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தெற்காசிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தியில் பின்னடைந்து இருப்பதாக பாகிஸ்தானின் மத்தியவங்கித் தலைவர் கலாநிதி இஷட்ஹசைன் தெரிவித்துள்ளார்.

ஊழல் செயற்திறன் இன்மை என்பன காரணமாகவே இந்த நிலைமை அனேகமான தெற்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ளதாகவும் அவா கூறியுள்ளார்.

இலங்கை மத்தியவங்கியின் 54 காவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டபோதே நேற்று முன்தினம் அவர் கொழும்பில் இவ்வாறு கூறியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தியை ஈட்டிக் கொள்வதற்கு அனைத்து நாடுகளும் தூர நோக்குடன் செயற்பட வேண்டும். இதேவேளை பல்வேறு முக்கிய கட்டங்கள் கால இடைவெளிகள் மூலம் இந்த குறிக்கோளை செயற்படுத்துவதற்கான வரைபடம் ஒன்று அத்தியாவசியமானது.

இந்தக் குறிக்கோள் வரைபடம் என்பது தேசிய தேவையாகக் கருதி தயார்ப்படுத்தப்படவேண்டும் நாட்டின் பொருளாதாரம் செல்ல வேண்டிய திசை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளினதும் கொள்கை இதன்போது முக்கியத்துவம் வாய்ந்தாக அமையும்.

வெவ்வேறு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போதும் சரியான பொருளாதாரத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதற்கு உதாரணமாக சீனா விளங்குகின்றது.

பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதற்காக சீனஅரசிடம் சரியான குறிக்கோளும வரைபடமும் உள்ளது.

1978 முதல் இன்றுவரை ஒரே அரசியல் கட்சி ஆட்சியில் இருப்பதே இதற்குக் காரணம் என்று பலா சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் அவா கூறியுள்ளார்.



சீனாவில் தைபூன் சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு, என்பவற்றைக் காட்டும் படம்.



சந்தடியற்ற நஜாப் நகர வீதி ஒன்றுக்கு மேலாகப் பறக்கும் அமெரிக்காவின் அப்பாச்சி உலங்கு வானூர்தி.



ஆப்கானிய எல்லையில் அல் – ஹைதா தீவிரவாதிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளாகிய பாகிஸ்தான் இராணுவத்தினரின் வாகன அணி. (சம்பவத்தில் இரு இராணுவத்தினர் பலி)

# தமிழ் மக்களின் பேரம் பேசும் ஆற்றலை குறைப்பதற்கு அரசு முயல்கின்றது

## – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பா. உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் ஏற்கனவே ஒரு ஸ்திரமற்ற நிலையில் கொண்டுவந்து, அதன்மூலம் தமிழ்பேசும் மக்களின் பேரம்பேசும் ஆற்றலைக்குறைக்க முற்படுகிறது. இம் முயற்சிகளின் தொடர்ச்சியாகத் தான் கிழக்குமாகாணத்தில் பல்வேறுபட்ட சம்பவங்கள் நடக்கின்றன என தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இவர் அண்மையில் லண்டன் சென்றிருந்த சமயம் லண்டன் பி.பி.ஸி தமிழோசைக்களித்த செவ்வியிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது நாட்டில் சமாதான முயற்சிகள் எந்த நிலையில் இருக்கின்றன எனக்கேட்டபோது,

கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்தச் சுமுகமான சூழ்நிலைகள் ஒரு முடங்கிய நிலைக்கு வந்தன.

அதன் பின்னர் பாராளுமன்ற தேர்தல் நடந்து பாராளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்று நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டன.

ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகள் ஓர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒருயோசனையை முன்வைத்திருக்கிறார்கள். அதனடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபொழுது கூட, சிறிலங்கா அரசாங்கம் தாங்களொரு புதிய பிரேரணையைத் தயாரிப்பதாகவும், அதனை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கொடுக்கவிருப்பதாகவும் அதன் பின்னரே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்ற நிலைப் பாட்டைத்தான் கொண்டிருக்கின்றது.

இந்தப் பேச்சுவார்த்தை கடந்த நவம்பர் மாதம் முடக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் இன்று மிக மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

அன்று விடுதலைப்புலிகள் கொடுத்த பிரேரணையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், நிலைமைகள் நிச்சயமாக மாறியிருக்கக்கூடும். அதுமட்டுமின்றி பேச்சுவார்த்தைகள் சரியான திசையில் போவதற்கான சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்கும் என்றார்.

தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 20இற்கும் மேற்பட்டோர் பாராளுமன்றில் இருக்கின்றீர்கள்; நீங்கள் அரசிற்கு எந்தவகையில் நெருக்கடி கொடுத்துள்ளீர்கள் எனக் கேட்டபோது,

அரசாங்கத்துடன், அதாவது சனாதிபதியுடன் நாங்கள் மூன்று மணி நேரத்திற்குமேல் உரையாடியிருக்கின்றோம்..

பேச்சுவார்தையின் அவசியத்தை அவருக்கு விளங்கப்படுத்தியிருக்கின்றோம்.

எங்களுடன் அவர் பேசுகின்ற பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் கொடுத்த அந்தப்பிரேரணையின் அடிப்படையில் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால், அடுத்த நாளே அந்த நிலையிலிருந்து மாறிவிட்டார்.

ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணியாமல் அரசு பேச்சுவார்த்தைகளைத் தொடருமேயானால் நிச்சயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு மாத்திரமல்ல; முக்கிய எதிர்க்கட்சிகளின் அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவையும் பெறமுடியும் என்றார்.

# வாடகை உந்துருளி ஓட்டுநர்களுக்கு வீதி விபத்துக்களைத் தவிர்க்க அறிவுரை

(அலுவலக செய்தியாளர்)

வாடகை உந்துருளி ஓட்டுநர்களுக்கு வாகன போக்குவரத்து கண்காணிப்பாளர் கு. கனகலிங்கம், வாகன போக்குவரத்துப்பிரிவுப் பொறுப்பாளர் சி. சிவகுமார் ஆகியோர் தலைமையில் வீதி விபத்துக்களை எவ்வாறு தவிர்க்க வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கப் பட்டன.



கடந்த வியாழக்கிழமை அன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப்பணிமனையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வாடகை உந்துருளி ஓட்டுநர்களுக்கு மூவர் பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது எனவும், இதனைக் கருத்தில் கொள்ளாமல் போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிக்காமல் நடப்போர் மீது தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்து பிரிவினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் வாகன போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்துள்ளார். (தீ)

# மன்னாரில் குழாய் நீர் விநியோகத்தை அனைவருக்கும் வழங்கத் தீர்மானம்

(மன்னார்)

மன்னார் நகரில் தேவையற்ற இடத்திலுள்ள நீர் இணைப்புக்களை அகற்ற வேண்டுமெனவும், அதற்குப்பதிலாகக் குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் வீட்டிற்குள்ளேயே இவ்விணைப்புக்களை வழங்கலாமெனவும், இதற்கான நீர் விநியோக இணைப்புக்களை அனைவருக்கும் வழங்க குறைந்த தவணைக் கடனடிப்படையில் இப்பணத்தை வழங்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சேரியில் நேற்று முன்தினம் அரச அதிபர் தலைமையில் மன்னார் நகரத்தில் குழாய்நீர் விநியோகம் தொடர்பான கூட்டம் இடம்பெற்றது. இதன்போது இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதில் தேசிய நீர் விநியோக அதிகாரசபை அதிகாரிகள் உட்பட பல அரசசார்பற்ற அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதற்கமைய இனிமேல் மன்னாரில் நெருக்கடிமிக்க நீர்விநியோகக் குழாய்களை அகற்றவேண்டுமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மி)

# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை அரசு உடனடியாக முன்னெடுக்க வேண்டும்

## -வவுனியா பொதுசன அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை வவுனியா மாவட்ட பொதுசன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவ் அமைப்பு இவ்வாறு கேட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை விரைவில் போர் ஒன்று ஏற்பட்டு விடுமோ என்ற ஐயத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. எனவே, நாட்டின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பித்து, தமிழீழ விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அலகினை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்,

சமாதானத் தீர்வினை எட்டுவதன் மூலம் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களிலும், புலம்பெயர்ந்து சர்வதேச நாடுகளிலும் வசித்து வரும் மக்கள் தமது சொந்தப் பகுதிகளில் மீளக் குடியமர வழி செய்யுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (21)

## தமிழ்மொழி கலைத்திறன் போட்டி

"முல்லைத்தீவு, துணுக்காய்க் கல்வி வலயங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள் யாவும் எதிர்வரும் 02.09.2004,03.09.2004 (வியாழன், வெள்ளி) ஆகிய நாட்களில் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. 1ஆம் நாள் நிகழ்வாக மொழித்திறன் போட்டி நிகழ்ச்சிகளும், கூத்து நிகழ்ச்சிகளும், இரண்டாம் நாள் நிகழ்வாக இசை,நடன,நாடக நிகழ்ச்சிகளும் நடைபெறும் என்பதனை முல்லை மாவட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டிச் செயற்குழுத் தலைவரும், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருமான மா.தேவேந்திரன் அறியத்தந்துள்ளதுடன் இதனை முல்லைத்தீவு, துணுக்காய் வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கருத்தில் கொண்டு செயற்படுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.(சோ,கு)

## வயோதிபப் பெண் குத்திக் கொலை


(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று சின்னமுகத்து வாரப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இச் சம்பவத்தின் போது தனது வீட்டுத்திண்ணையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த போதே இவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் அக்கரைப்பற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சடலம் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பற்சிகிச்சைப்பிரிவு கடந்த புதன்கிழமை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப் பெற்றன.

மாவட்ட வைத்தியசாலையில் அமைந்துள்ள பற்சிகிச்சை அறை புனரமைக்கப் பெற்று, புதிய பற்சிகிச்சை இயந்திரம் மூலம் பற்சிகிச்சைகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரூடாக 1.4 மில்லியன் ரூபா செலவில் இப் புதிய பற்சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பற்சிக்சை நிபுணர் எம்தவராஜா தலைமையில் மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளி.முல்லை மாவட்ட யுனிசெப் பிரதிநிதி திருமதி பெனிபுரூன் பற்சிகிச்சைப் பிரிவினை வைபவ ரீதியாக நாடாவினைவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

கிளி.மாவட்ட பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி, மாவட்டவைத்திய அதிகாரி ஆர்.சிவானந்தன், வைத்தியர்கள் எஸ்.ஜீவா,ரி.சுவேந்திரன், சிதம்பரநாதன் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.(சோ,கு)

## இருதய நோயாளர் பதிவுசெய்க

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை ஆழியவளை நில்லயத்தினரால் இருதய நோய் சம்பந்தமான நோயாளர்கள் தெரிவு செய்யப் பெறவுள்ளனர். நாளை பிற்பகல் 2.00 மணி முதல் பிற்பகல 6.00 மணிவரை மேற்படி நோயாளர் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

எனவே இந்நோய்க்குரியவர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில், மேற்குறிப்பிட்டநிலையத்தில தங்கள பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும் வண்ணம் திலீபன் மருத்துவ சேவையினர் வேண் டியுள் ளனர். (சோ,கு)

# போதனாசிரியர் நேர்முகத் தேர்வு

(அலுவலக செய்தியாளர்)

தற்காலிக கணினிப்பயிற்சி போதனாசிரியர் பதவிக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 01.9.2004 அன்று காலை 9.00 மணிக்கு கிளி.வலயக்கல்விப்ணிமனையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகத்தேர்விற்கு வருகை தருபவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணபப்பபடிவம், கல்வித்தகைமைச் சான்றிதழ், தொழிற்தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் ஏனைய பொருத்தமான ஆவணங்களுடன் வருகை தரும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளது. இப்பதவிக்கு ஆங்கிலத்தில் திறமைச்சித்தியும், கணினியில் (Diploma in microsoff office) பயிற்சியும் முக்கியமான தகைமைகளாகக் கருதப்படுமென கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.(சோ,கு)

# வவுனியா பல்கலைக்கழகம் செப்ரெம்பர் முதல் இயங்கும்!

கடந்த யூன் மாதத்தில் ஏற்பட்ட சில குழப்பங்களால் யூலை 22இலிருந்து மூடப்பட்டிருந்த வவுனியா பல்கலைக்கழத்தில் செப்ரெம்பர் 1ஆம் திகதியிலிருந்து வகுப்புக்கள் வழமைபோல் ஆரம்பிக்கவுள்ளன.

பல்கலைக்கழகத்திற்கென ஒதுக்கப்பட்ட பம்பைமடு காணியில், பல்கலைக்கழகக் கட்டடங்களைக்கட்டுமாறு கோரி வளாக முன்றலில் மறியற் போராட்டம் செய்த மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் சிலரை கட்டடத்திற்குள் பூட்டிவைத்து ஆர்ப்பாட்டம் செய்ததனால் எழுந்த குழப்பங்களால் இப்பல்கலைக் கழகம் மூடப்பட்டிருந்தது.

சென்ற வாரத்திலிருந்து, பம்பைமடு காணியில் ஒரு விளையாட்டு மைதானம், மாணவர் தங்குமிடம், சில வகுப்பறைகள் போன்றவற்றைக் கட்டியெழுப்பும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து செப்ரெம்பரில் வகுப்புக்களை மீளவும் ஆரம்பிக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

# குடாநாட்டின் புனர்வாழ்வு புனரமைப்பு;

# கருப்பொருளில் யாழ். இல் கருத்தமர்வு

**யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில், யாழ்.மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு நிர்மாண செயற்பாடு எனும் கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது.**

புவியியற்றுறை மாணவ் ஒன்றியத் தலைவரின் தலைமையில் யாழ்.மாவட்ட அரசஅதிபர் பத்மநாதன் பங்குபற்றிய இக்கருத்தரங்கில் புவியியற் றுறைத் தலைவர் பேராசிரியர் சிவச்சந்திரன் விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்துரை வழங்கிய அரச அதிபர் பத்மநாதன் 1983 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையான வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பாக முன்வைக்கப்பட்ட திட்டங்கள், அவற்றின் நடைமுறைகள் அதில் ஏற்பட்ட தடைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர். (36)

# முன்பள்ளிகளுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை அமுற்படுத்த வேண்டும்

## - அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயங்கி வரும் சகல முன்பள்ளிகளுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டம் ஒன்றை அரசு அமுற்படுத்த வேண்டும் என யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் சுமார் 800 வரையிலான முன்பள்ளிகள் இயங்கி வருகின்றபோதும், இவற்றிற்கென ஒழுங்கமைக் கப்பட்ட பாடத்திட்டங்கள் எதனையும் அரசு அறிமுகம் செய்யவில்லை. இதனால் ஒவ்வொரு பள்ளிகளிலும் ஒவ்வொரு விதமான கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

இதன் காரணமாக முன்பள்ளிகளில் பயின்ற சிறார்கள் பாடசாலைக் கல்வியில் இணையும் போது அவர்களுடைய கல்வி வளர்ச்சியில் பாரியளவு வேறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றமையைச் சுட்டிக்காட்டியே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ் தடம் புரண்டது

## –பயணித்தோர் தெய்வாதீனமாக உயிர் பிழைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளை ஏற்றி வந்து கொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்று நேற்று முன்தினம் மாலை தனது கட்டுப்பாட்டை இழந்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அருகாமையில் தடம் புரண்டது. இதன் போது தெய்வாதீனமாக அதனுள் பயணம் செய்த பயணிகள் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர். ஆனால் மினி பஸ்சின் கண்ணாடிகள் அனைத்தும் உடைந்து பலத்த சேதமானது. அவ்விடத்தில் கூடி நின்ற மக்கள் வீதிக்குக் குறுக்காகப் பிரண்ட அவ் வாகனத்தை அப்புறப்படுத்தி போக்குவரத்தினை சீர்செய்தனர். (36)

# புலிகளின் இ.நிர்வாக யோசனையை ஏற்று இறுதித்தீர்வுக்கு அரசு வழிவகுக்க வேண்டும்

## – வவு. வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் சனாதிபதிக்கு மகஜர்

(வவுனியா)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையானது மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு விடுமோ என்ற ஐயப்பாட்டைத் தோற்றுவித்திருப்பதாகவும், புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை மீண்டும் கவனத்திலெடுத்துத் தீர்வுத் திட்டத்தின் ஆரம்பகட்டமாக அதனைத் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதனூடாக சமாதானத்தின் இறுதித் தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் வவுனியா வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் சனாதிபதிக்கு அனுப்பிவைத்திருக்கும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்த நாட்டில் கடந்த பல வருடங்களாகப் புரையோடிப் போயிருந்த தேசிய இனப்பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப் படவேண்டும் என்ற நற்சிந்தனையுடன் இரண்டரை வருடங்களுக்கு முன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதனூடாக நிரந்தரசமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய நாடுகளின் மேற்பார்வையுடனும் அனுசரணையுடனும் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்று வந்தன. ஆனால் சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டதன் காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தேசிய இனப்பிரச்சினையானது சுமுகமான முறையில் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைக்கப் படுவதனூடாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களும் யுத்த அனர்த்தம் காரணமாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து அகதிவாழ்வு வாழும் மக்களும் மீண்டும் தத்தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பி மீள்குடியமர்ந்து தாங்களும் தங்களினது எதிர்காலச் சந்ததியினரும் சுபிட்சமான வாழ்வு வாழவேண்டும் என்பதே அவர்களினது எதிர்பார்ப்பாகும்.

எனவே இந்நாட்டின் சர்வ அதிகாரங்களையும் கொண்ட தலைவி என்ற வகையில் தேசத்தின் எதிர்கால சுபிட்ச நல்வாழ்வினை நோக்காகக் கொண்டு இடைநிறுத்தப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தையினை உடன் ஆரம்பிப்பதுடன் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையை மீண்டும் கவனத்திலெடுத்து தீர்வுத் திட்டத்தின் ஆரம்பக்கட்டமாக அதனை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதனூடாக சமாதானத்தின் இறுதித் தீர்வுக்கு வழிவகுக்க வேண்டும் என தமிழ் மக்களினது சார்பில் வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்வதாக அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரினை தலைவர் ச.குலதேவராஜா, செயலாளர் வெ.குகேந்திரன் ஆகியோர் கையொப்பம் இட்டு அனுப்பியுள்ளனர். (21)





யாழில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி நிகழ்வில்...

(படங்கள் செல்வா)

# காரைநகரில் மக்களற்ற காணிகளில் கடற்படையினரால் பனைமரங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள காரைநகர்ப் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் பயன்தரு பனை மரங்களை தறித்துத் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். இராணுவ அச்சுறுத்தல் காரணமாக மக்கள் குடியமரச் செல்லாத தனியார் காணிகள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றிலுள்ள பனை மரங்களைத் தறிக்கும் படையினர் உழவு இயந்திரங்கள் மூலம் அவற்றைக்குற்றிகளாக ஏற்றிச்சென்று தமது முகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திவருகின்றனர்.

இது குறித்து அப்பகுதிப் பொது அமைப்புக்கள் கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன. (33)

# குடாநாட்டில் பரவலாக வீரமுரசு கலையரங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் வீரமுரசு கலையரங்க நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

மக்களிடையே சமூக அரசியல் மற்றும் சமகால நிலவரங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இது இடம்பெற்று வருகிறது.

மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கான கலையம்சங்களுடன் வீதி நாடகம், விழிப்புணர்வு ஆற்றுகைகள் என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.(33)

# பேருந்துச் சேவைகளை விரிவாக்க நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிற்கிடையேயான பேருந்துப் போக்குவரத்துச் சேவையை விஸ்தரிக்கவென 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளுக்கிடையேயான பேருந்துப் போக்குவரத்துச் சேவையில் உள்ள குறைபாடுகளால் பயணிகள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் போக்குவதனை நோக்காகக் கொண்டே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (33)

# 4 நாட்களுக்குள் ஆயுதங்களை ஒப்படைக்குக!

# சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு உத்தரவு

(கொழும்பு)

மணலாறு சிங்களக் குடியேற்றவாசிகளிடமுள்ள ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்க 4 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டிருப்பதாக மணலாறு பொலிஸ் நிலைய பரிசோதகர் ஜினதாச தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்மாவட்டத்தில் நிக்கவெவ கிராமத்தில் ஊர்காவற் படைவீரரின் வீட்டிலிருந்த கைக்குண்டுப் பெட்டி வெடித்ததில் அவர் அவ்விடத் திலேயே உயிரிழந்ததையடுத்து மேலும் இவ்வாறான ஆயுதங்கள் பொதுமக்கள் வசமிருக்கத் தேவையில்லை என்ற அடிப் படையில் இவ் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதிக்குள் ஒப்படைக்கும் ஆயுதங்கள் தொடர்பில் எதுவித சட்டநடவடிக்கையும் எடுக்கப்படாது என்றும், கையளிக்க முடியாதவிடத்து பொலிசாருக்கு தகவல் தெரிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# சுயாதீன தே. ஆணைக்குழு நியமிக்காமைக்கு சிறிலங்காவின் அரசியல் அமைப்பே காரணம்

## - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாமைக்கு சிறிலங்காவின் அரசியலமைப்பே காரணம் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர் விபரங்களை சனாதிபதியிடம் சமர்ப்பித்து மூன்று மாதமாகியும் அரசியலமைப்பு அதற்குத் தடையாக இருப்பது அதனைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு அமைக்கும் பொறுப்பு அரசியலமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளதால் அரசியல் சபை மூலம் முழுமையான பணியை ஆற்ற முடியாதிருக்கும் என அவர் விளக்கியுள்ளார். . ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளவர்களின் பெயர்களை சனாதிபதி சிபாரிசு செய்து 2 வருடங்களாகியும் அவ்வாறு செய்யாததால் தான் பதவியை இராஜினாமாச் செய்யும் நிலையிருப்பதாகவும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்
# சிறப்பிதழ்


## முருகன் துணை
### புடைவையகம்



நவநாகரிக நங்கையர் விரும்பும்
நவீனரக ஆடைகளுக்கும்
புத்தம் புதிய பட்டுப்புடைவைகளுக்கும்
கைராசியான நிறுவனம்

யாழ்.சாலை, கிளிநொச்சி.

(சி-10301)



## ஜெகம்
### நகை அகம்

மங்கையர் கண்கவரும் டிசைன்களில்
அசல் 22 கரட் தங்க நகைகளை
கைதேர்ந்த தொழில்நுட்பவல்லுனர்களால்
மனதைக் கவர்ந்தடிசைன்களில் செய்து
கொள்ள இன்றே நாடுங்கள்
நவீன முறையில் மிசின் கட்டிங்கும்
செய்து கொடுக்கப்படும்.

கரடிப்போக்கு, கிளிநொச்சி.

T.P: 021 - 22285753

(சி-10302)



## மலரவன் புடைவை வாணிபம்


யாழ். சாலை, கிளிநொச்சி.

(சி-10303)


## கிளிநொச்சி மாவட்ட அருள் மிகு கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா விஞ்ஞாபன

கலியுக வரதனான ஆறுமுகக் கடவுள்
வள்ளி தேவசேனா சமேதராக
பொய்யான ஆணவ இருளைப் போக்கி,
மெஞ்ஞான ஒளியை மக்களுக்கு
அருளத் தேரில் பவனி வரும்
பெருவிழாகாண வாரீர்.
28. 08. 2004 சனிக்கிழமை காலை 8. 00 மணி

வினை தீர்க்கும் வேலவன் தேரேறி வருகி
மகத்தான தினமாகும். கிளிநொச்சி மாவட்டத்
ஆகம விதிப்படி நடைபெறும் கிளி/கந்தசு
கோவிலில் பல வருடங்களாகத் தடைப்பட்டிரு
மகோற்சவங்கள் சென்ற வருடம் முதல் சிறப்ப
நடைபெற்று வருகின்றமை இறைவனின் அருளேயா
அடியார்கள் தமது நேர்த்திக்கடன்க



வழமைபோல் செய்ய ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளோம். ஆணவ மலம் அழிந்து, அன்பும் அகிம்சையும் சிற வண்ணம் இறைவன் தேரில் வரும் இத்தினம் காண்பது மிகவும் புண்ணியத்தைத் தரும் என எமது மக்கள் கருதுகின் அடியார்களின் நலன் கருதிப் புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்கும் செய்யப்பட்டுள்ளது. யுத்தப் பீதி நீங்கி, அமைதி பெற்று, நல்வாழ்வு பெற தேரில் ஏறிவரும் வேலவனைக் கண்டுக துதித்து அருள் பெறுவோம்.

அல்லலுறும் உள்ளமது கந்தன் ஆலயத்தை நாடும் ஆலயத்து முன்றலிலே காவடிகள் ஆடும். அழுது தொழுமடிய துன்பமெல்லாம் ஓடும். ஆறுமுகனருளாலே இன்பம் கூடும்.

ஓம் முருகா, ஓம் முருகா, ஓம் முருகா

## கிளிநொச்சி மாவட்டச் செயலாளர்/அரச அதிபர் உயர்திரு.தி.இராசநாயகம் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை.

கிளிநொச்சி மாநகர் வாழ்மக்களின் சிறந்த வழிபாட்டு மையமாக விளங்குவது கிளிநொச்சி கந்த[illegible] கோவிலாகும். இவ்வாலயத்தில் தமிழ்க் கடவுளாம் முருகன் வேலெடுத்து வீசிக்காட்டி வீரவடிவ விளங்குகின்றார். முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன், அழகன், குமரன் அருளா புரியும் இவ்வாலயத்தில் வருடாந்தப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று இறுதிநாளில் தேர்த்திருவ நடைபெறுகின்றது. கந்தப்பெருமான் தேரேறி உலாவரும் இனியகாட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

பலவழிகளாலும் அல்லற்பட்டு ஆற்றாது. வாழ்விடங்களை விட்டு வெளியேறி மீண்டும் செ வாழ்விடங்களுக்குத் திரும்பி புதிதாக வாழ்வை ஆரம்பித்திருக்கும் எமது மாவட்ட மக்களுக்கு, கருணைக்கட கந்தப்பெருமான் தேரேறி உலாவந்து அருள்புரிய வேண்டி நிற்கின்றேன். அவனது தேருலாச்சிறப்பு மலரு ாங்கனிந்த நல்வாழ்த்துரையைத் தெரிவிக்கிறேன்.

தி.இராசநா
அரசாங்க அதி
கிளிநொச்சி. மாவட்




பட்டு புடைவைகள், சல்வார், பட்டுவேட்டி சேட், துணிவகைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய சிறந்த இடம்

## தங்கம்மா புடைவை வாணிபம்

யாழ். சாலை, கிளிநொச்சி

(சி-10304)

## மெய் மெய் உதிரிகள் வாணிபம்

உழவு இயந்திர உதிரிகள்,
மோட்டார்சைக்கிள் உதிரிகள்,
சகல வாகன பற்றறி வகைகளுக்கும்
சிறந்தனவற்றைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.

(சி-10305)

## தின்னன் வேளாண் பொருள்வாணிபம் (சுபாஜினி ரேடேர்ஸ்)

சீ. ஐ. சீ உரம் ஏகவிநியோகஸ்தர்
மக்வூட் கொம்பனி கிருமி நாசினி ஏகவிநியோகஸ்தர்
மற்றும் கிருமி நாசினி வகைகள்,
உரவகைகள், தெளிகருவிகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். சாலை. கிளிநொச்சி.

(சி-10306)

# தான வருடாந்த இரதோற்சவ

# 28-08-2004

வல்லமை வடிவே!
இரத மேறிவரும் இன்பத்தமிழ் முருகா!
வருக! விழிவிரித்து
திசையெட்டிலும் பரவுக!
ஈகங்கள் கலந்த இம்மருத நிலத்தில்
உன் தேர்ச்சக்கரங்கள் உணர்ந்துருளுக!
இதுபார் இருளைக்கிழிக்கும்
வேல் பிடித்த கரங்களின்
வேகங்களை! தாகங்களை!
சோகங்களை வென்று கொண்டிருக்கும்
சுடர்விளக்குகள் உன்னைச் சுற்றிலும்
உன் வேல்களுக்கு
இன்னும் வேலை இருக்கின்றது
வெற்றித் திலகமிடும் பேறு
வள்ளி தெய்வானைகளுக்கு
இன்னும் இருக்கின்றது
கந்தா! காதலும் வீரமும் கலந்து
எங்கள் வல்லமையின் வடிவாக
இன்றும் வலம் வருக வருக!!
-பொன்.காந்தன்



## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி கந்தவேள் பரமன்ரதோற்சவம் காண நாம் பெரும் பேறு பெற்றவர்களாவோம். திருக்கோயிலில் நடைபெறும் ...ற்சவங்களுள் தலையாயது தேர்த்திருவிழாவாகும். ஊர்கூடித் தேர் இழுத்தல் என்ற தத்துவத்தை உணர்த்தும் இவ்விழாவில் ...றைவனது திருத்தேரின் வடத்தினைத் தொட்டு இழுத்து தமது பிறவிப்பிணி நீங்கி கடைத்தேற அடியார்களுக்குக் கிடைத்த ...ப்பாகும். எம்மைப் புனிதர்களாக்கும் இந்நாளில் அனைவரும் இறைவன் சந்நிதானத்தில் பெறும் தெய்வீக அனுபவம் அளப்பரியது. ...லியுகவரதனின் தேர்விழா ஆன்மாவைப் பிடித்திருக்கும் மாயையை நீக்கி, ஒளியை ஏற்படுத்தி உலகம் செழிப்புற வாழ்த்துகிறேன்.

சிவகாமகிரியா தத்துவநிதி (தர்மசாஸ்தாகுருகுலம்–இணுவில்)
சிவஸ்ரீ கு. இரத்தினேஸ்வரக்குருக்கள்,
பிரதம சிவாச்சாரியார், முருகன் ஆலயம்-கிளிநொச்சி.

சரவணபவ

## கிளிநொச்சிக் கந்தனின் தேர்த்திருவிழா ஆசியுரை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆதி காலத்தில் பழைய குடியேற்றத் திட்டக் காலத்தில், திருவாளர் முகாந்திரம் வெற்றி வேலு கிராமசேவையாளர் அவர்கள் வருங்கால சைவமக்கள் வழிபட்டு முத்தியின்பம் பெறவேண்டும். என்னும் நற்சிந்தனை உந்தித் துதிக்க அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெற்று வருவதை யாவரும் கண்டு களிப்பார்கள்.இன்று கலியுகவரதன் (கலி) துன்பம் நிறைந்த இச் சமகாலத்தில் எம் பெருமானுக்கு நைமித்திய பூசையின் 8ஆம் நாளாகிய 28-08-2004 சனிக்கிழமை காலை 8மணியளவில் தேரில் அமர்ந்து மக்களின் துன்ப துயரங்களைத் தீர்த்து, தன் திருவடித்தாமரைகளில் சோத்துக் கொள்ளுவார் என்பது யாவரும் அறிந்த விடயம். ஆகவே இப் புண்ணிய புனித நல்தினத்தில் சகல மக்களும் தேரில் அமர்ந்து காட்சித்தரும் வேலனைத் தரிசித்து தேர் வடத்தில் பிடித்து எங்களை பீடித்த பாவ வினைகளைப் போக்கி நாம் உய்ய, கிராமம் உய்ய, நாடு, நகரம் உய்ய வழிபட்டு எம் பெருமானின் அருட் கடாட்ஷத்தைப் பெற்று எங்களைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நிவிர்த்தி செய்து எங்குமாயிருக்கும் இறைவனை எங்கள் உள்ளத்திலும் கண்டு களிப்படைவோமாகுக, சேர்ந்தனார் பெருமான் பாடியருளிய திருப்பல்லாண்டைப் பாடித் தேர்வடம் பிடித்து இழுத்துப் பாவவினைகளைத் தீர்ப்போமாகுக,

ஓம் சரவணபவ, ஓம் சரவணபவ, ஓம் சரவணபவ,
மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி,

## ஆசியுரை

சம்ஹாரம் என்பது துக்கங்கள் போய் சுகங்கள் சேருதல் எனலாம். ரதோற்சவம் சங்கார விழாவாகவே அமைகிறது. எனவே இறைவன் பூமியினை ரதமாகவே கருதுகிறார். தேரில் காணப்படும் நான்கு வெண்குதிரைகளும் நான்கு வேதங்களை உணர்த்துகின்றன. வேதங்களுக்கு அதிபதி பிரம்மா. பிரம்மாவே தேரின் சாரதியாக இருந்து எண்திசையும் உள்ள பக்தர்களை நோக்கி பூமித்தேரை ஒழுங்கான முறையில் வழிநடத்தி வருகிறார். தேர்ச்சில்லுகள் சூரிய சந்திரரைக் குறிக்கும். சூரியன் பாவங்களைச் சுட்டெரிக்கின்றான். சந்திரன் இன்பத்தைக் கொடுக்கிறான். எனவே தேரின் தோற்றம் தேரின் அசைவு என்பன ஆன்மாக்கள் தம்நிலையில் இருந்து மாறி தெய்வீகத்தன்மையை அடைகிறார்கள் என்பதே ஆகும். இவ்வாலய தேர்த்திருவிழாவில் கிளிநொச்சி வாழ் சைவ அடியார்கள் அனைவரும் கந்தன் அருள் பெற்று வாழ முருகன் திருவருளால் ஆசீர்வதிக்கிறேன்.

மகோற்சவ குரு சிவாச்சாரியர் திலகம். ஜெக. ஜெகதீஸ்வரக்குருக்கள்
முருகன் தேவஸ்தானம்.




தரம் நம்பிக்கை நிதான விலையில்
மங்கையர் மனங்கவரும் ஆடைத் தினுசுகள்

திருமண பட்டுச்சாறிவகைகள்
சோளி கிற்
சேட்டிங் – சூட்டிங்
சேட் வகைகள்
ஸ்கேட் & பிளவுஸ்
கவுண்
பஞ்சாபி சூட்
பட்டுவேட்டி
பேபி சூட்
சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற
றெடிமேட் ஆடைகள்

அனைத்திற்கும் சிறந்த ஸ்தாபனம்

முத்துப் பிள்ளையார் வண்ணச்சோலை

மல்லாவி - கிளிநொச்சி.
(சி-10312)



செந்தூரன் களஞ்சியம்

தரமான மின்சாரப் பொருட்கள் விற்பனையாளர்கள்

எம்.எம்.பி.கட்டடம்.
யாழ். சாலை, கிளிநொச்சி.
(சி-10311)



குமரகுரு புடைவை வாணிபம்

எல்லா வகையான உயர்ரக
இந்திய சாறிவகைகள், துணிவகைகள்,
விதவிதமான சிறுவர் ஆடைகள்,
நவீனரக புடைவைகள் மற்றும் ரெடிமேட்
ஆடைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

யாழ். சாலை, கிளிநொச்சி.
(சி-10310)

...தழுந்தை களஞ்சியம்
(A.K.R)
கிளிநொச்சி.
...மாட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
...ழவுஇயந்திர உதிரிப்பாகங்கள்
...னைய அனைத்து விதமான
...ாகன உதிரிப்பாகங்களையும்
...ங்கே மொத்தமாகவும்,
...ல்லறையாகவும்
...பற்றுக்கொள்ளலாம்.
...0307) T.P No 021 2285786

கிளிநகரில் சுவைமிகு காலை,பகல்,இரவு உணவுகள்.
குளிபானவகைகள், தேநீர், சிற்றுண்டிகளுக்கு
சிறந்ததோர் உணவகம்.

"கிளியரசன்" சுவையகம்

A.9. வீதி. கிளிநொச்சி.
(சி-10308)



லலிதா பல்வகை வாணிப நிலையம்

உங்கள் தேவைகளுக்கு
முந்துங்கள்

BATTERIES
WATCH
VIDEO CAMERA
CAMERA
CALCULATOR

பற்றரிவகைகள்
கைக்கடிகாரம்
வீடியோ புகைப்படக்கருவி
புகைப்படக்கருவி
கல்குலேட்டர்

இவற்றுடன், இலங்கையில் முதற்தரமான மஸ்கன் கூரைத் தகடுகளை (ASBESTOSSHEET) சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:~
யாழ். சாலை, கிளிநொச்சி.
(சி-10309)



# கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான
# வருடாந்த இரதோற்சவ சிறப்பிதழ் 28-09-2004



## கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

19ஆவது அகவையில் கால் பதிக்கும் எமது சமாசம் கிளை பரப்பித் தனது சேவைகளை ஆற்றி வருகின்றது.

- **வங்கிச்சேவை**
  உத்தியோகத்தர்களுக்கான கடன் வழங்கப்படுகின்றது.
- **சோலர் மின்கலத் தொகுதி**
  இதுவரை காலமும் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே வழங்கி வந்த சமாசம் தற்போது இதனை வர்த்தகர்களுக்கும் கடனடிப்படையில் வழங்கவுள்ளது. என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
- **உந்துருளி வழங்கல்**
  உங்கள் உல்லாசமான பிரயாணத்தை விரைவாக்கிட உந்துருளி ஒன்றினைப் பெற்றுக் கொண்டு மனமகிழ்வடையுங்கள்
- **மொத்த, சில்லறை காகிதாதி சேவை,**
  பதிப்பகவேலை, அச்சுப்பதிப்பு, கணணிப்பதிப்பு, றோணியோ, போட்டோ பிரதியாக்கல்.

*மற்றும் கதிரை வாடகை சேவைகளையும் ஆற்றி வன்னி மக்களின்*
*மனங்களிலே நீங்காத இடத்தைப் பிடித்த ஒரே நிறுவனமாகத் திகழ்கிறது.*
*சுற்றும் உலகிலே சுற்றி வர உந்துருளிகளா*
*சூழும் இருளைப்போக்க சூரிய மின்கலமா*
*தெரிவு செய்ய நீங்கள் தயாரா?*
*கடன் வழங்க நாங்கள் தயார்!*

(சி-10313)

செயலாளர்
சி.க.கூ.ச.சமாசம்.

---

பழைய உலோகப் பொருட்கள் வாங்கவும் விற்கவும்

## மெய்கண்டான் இரும்பகம்

மாதா கோவிலடி, கண்டிவீதி, கிளிநொச்சி.

**மெய்கண்டான்**

நவநாகரிக அழகுசாதனப்பொருட்கள் விற்பனையகம்
இல,41 பொதுச்சந்தை உட்புறம், கிளிநொச்சி.

(சி-10314)

---

## அருள்மணி பல்பொருள் வாணிபம்

உங்கள் குடும்பத்திற்கும், வியாபார நிலையங்களுக்கும்
தேவையான உலர் உணவுப் பொருட்களையும், மற்றும்
அத்தியாவசியப் பொருட்களையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாயமான விலைகளில்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே வாணிபம்

## அருள்மணி பல்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10315)

---



இன்று தேர்மீது பவனி வரும் கந்தன் அருளால்
எங்கள் நாடு சாந்தி சமாதானமாக
இருக்க பிரார்த்திக்கின்றோம்.

ஓடர் நகைகள் 22கரட்டில்
குறித்த தவணையில் செய்து
பெற்றுக்கொள்ள

## மணி ஐயப்பா நகைமாடம்

(தங்கப்பவுண் நகைவியாபாரம்)

யாழ்சாலை, கிளிநொச்சி.

தொ.பே:0776013572

(சி-10316)

---

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்
## மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்





வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

**வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத**
**இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!**

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து
ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.

★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடைவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.

★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.
★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.

T.P. 021-2285971

(சி-10317)

SM Graphics

---

## கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா



**இன்று கிளிநொச்சி கந்தசுவாமிகோவில்**
**தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.**
**இந்நாளில் தேரிலேறி வீதியுலாவரும்**
**எம்பெருமான் - வள்ளி மணவாளன்**
**தமிழ்மக்களின் சுபீட்சமான நல்வாழ்வுக்கு**
**கருணை புரிய வேண்டும் என**
**பிரார்த்திக்கின்றோம்.**



## ஏ.எம்.ரீ ரான்ஸ் போட் சேவிஸ்

NO-71, SHOE ROAD, KOTAHENA,
COLOMBO-13

**(A.M.T)**

பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்தி, கோப்பாய்,
யாழ்ப்பாணம். T.P- 0212225784

(சி-10146)



# கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான
# வருடாந்த இரதோற்சவ சிறப்பிதழ் 28-09-2004




## சிவா உந்துருளி சீர்களம்

உத்தரவுபெற்ற பஜாஜ் சுத்திகரிப்பாளரும்
திருத்துனரும் புத்தம் புதிய பஜாஜ் உந்துருளிகளுக்கு
இரண்டு இலவச சுத்திகரிப்பு வழங்கப்படும்.
நீங்கள் நாட வேண்டிய இடம்



202, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(சி-10318)



இன்று தேர்மீது பவனி வரும் கிளிநொச்சிக்கந்தன் எம் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை
நீக்கி எம் கந்தனின் அருள் மக்கள் அனைவருக்கும் கிட்ட பிரார்த்திக்கின்றோம்.

கனகபுரம் கிராம அபிவிருத்திச்சங்கம்,
கனகபுரம் சனசமூக நிலையம்,
கனகபுரம் விளையாட்டுக்கழகம்,
கனகபுரம் மாதர் சங்கம்.

(சி-10324)



## தங்கமாளிகை பல்பொருள் வாணிபம்

உங்களுக்குத்தேவையான
இலத்திரனியல் பொருட்களையும்
ஆடம்பரப்பொருட்களையும்
அன்பளிப்புப்பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

தங்கமாளிகை பல்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10323)



## பிறைமதி உணவகம்

சேவியர் கடைச்சந்தியில் மக்கள் மனம் நிறைந்த
சுவையான, தரமான சிற்றுண்டி வகைகளையும்
சைவ, அசைவ உணவுவகைகளையும் சுத்தமாக சுகாதார முறையில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே உணவகம்

## பிறைமதி உணவகம்

டிப்போ வீதி, சேவியர் கடைச்சந்தி
ஆனந்தநகர், கிளிநொச்சி.

(சி-10319)



## சிவபாக்கியம் உணவகம்

உங்கள் உளம் குளிர தேவையான குளிர்பானங்களையும்
சிற்றுண்டி வகைகளையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும்
பெற்று இன்புற நாடவேண்டிய இடம்

## சிவபாக்கியம் உணவகம்

முருகன் கோவில் அருகாமை,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-10322)



## வள்ளல் தளபாட மாளிகை

மரத்தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள், மற்றும்
வீட்டுப் பாவனைப் பொருட்களான பிளாஸ்டிக் கதிரைகள்
சோபா செற்றி வகைகள் மெத்தை வகைகள் அவற்றுடன்
குழந்தைகளுக்கான அணைகலன்கள் என்பவற்றைப் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டியது.



வள்ளல் தளபாட மாளிகை,
கரடிப்போக்குச் சந்தி, அருகாமை,
கிளிநொச்சி.

(சி-10320)

T.P. 0212285790



உங்களுக்கு தேவையான சைவ, அசைவ
உணவு வகைகளை சுகாதார முறைப்படி
பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

## கற்பகம் இன் சுவையகம்

மாவட்ட வைத்தியசாலை, முன்பாக
கண்டி வீதி, கிளிநொச்சி.



PEOPLE'S BANK

# மக்கள் வங்கி

உங்களின் எதிர்காலத்தைத் திட்டமிட இன்றே
மக்கள் வங்கியில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்

"மக்கள் மனமறிந்த
வங்கி மக்கள் வங்கி

இன்று தேரில் பவனி வரும் கலியுகவரதனான கிளிநொச்சி
அருள் மிகு கந்தனின் அருளாசிகள் எல்லோருக்கும்
கிடைத்திட வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஊழியர்கள்.

யாழ். சாலை

கிளிநொச்சி.

(சி-10321)

# பிரதமரை அதிகாரத்திலிருந்து அகற்ற

# சுதந்திரக் கட்சித் தரப்பிற்குள் சூழ்ச்சி!

## அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதம்

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமக்கு எதிராக சூழ்ச்சிகள் நடைபெறுவதாக கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

தனக்குப் பாதுகாப்பளிக்கும் கமாண்டோப் படையினரை பாராளுமன்றத்துக்குள் செல்ல விடாமல் தடுத்தமை, தான் வழமையாக பயணம் செய்யும் பாதையில் கைத்துப்பாக்கிக் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை, தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தான் எடுக்கும் முயற்சிகளுக்கு இடையூறு விளைவித்தல், பல ஊழியர்கள் தாக்கப்பட்டமை என்பவற்றை நோக்கும் போது இத் திட்டம் தெளிவாகிறதென மகிந்தராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் இவ்வாறு சீர்குலைக்கப்படுவதையிட்டு தான் ஆச்சரியப்படுவதாகக் கூறிய அவர் மகிந்தராஜ பக்ஷ என்ற வகையில் அனைத்துச்சவால்களையும் எதிர்கொள்ளத் தான் தயார் என்றும், பிரதமர் என்ற வகையில் அதன் கௌரவத்தைப் பார்த்துக்கொள்ள தான் அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவரின் கருத்துக்களுக்குப், பின்னர் அமைச்சரவை தெரிவித்திருப்பதாவது, பிரதமரின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபரையும், இராணுவத் தளபதியையும் அமைச்சரவைக்கு அழைத்து விசாரணை நடத்த வேண்டும் என்பதாகும்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சரவை நீண்ட நேரமாகஆலோசித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ஜே.வி.பி.யுடனான அமைச்சுத் தகராறு

# வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியும் பொறுப்புகள் ஒப்படைக்கப்படவில்லை

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சரான மைத்திரிபால சிறிசேனவிடமுள்ள மகாவலி, ஆற்றுப் படுக்கை, ராஜரட்ட அபிவிருத்தி அமைச்சுக்களை ஜே.வி.பியின் (உறுப்பினர்) அமைச்சர் அனுர குமாரயாப்பவிடம் வழங்குவதாக விசேட வர்த்தமானி மூலம் அறிவித்து இதுவரையிலும் அமைச்சுக்கள் ஒப்படைக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இவ்விடயம் தொடர்பில் கருத்து முரண்பாடுகள் தோன்றியிருப்பினும், பின்னர் இருபகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள போதும் சனாதிபதி வழங்குவதெனக் கூறிய விடயங்களில் அதிருப்தியடைந்த ஜே.வி.பி.யினர் கடந்த 12ஆம் திகதி வெளியான விசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரினர்.

இதுவரை அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ள போதும் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என ஜே.வி.பி பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்த அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பாக சனாதிபதியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இணையத் தொடர்பு துண்டிப்பிற்கு இந்தியக் கப்பல் காரணமல்ல

## இழப்பீடு கோரல் கைவிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கைக்கான இணையத் தொடர்பு மற்றும் 35 நாடுகளுடனான தொலைத் தொடர்புக்கான கடற்கீழ்த் தொடுகம்பியை அறுத்த இந்தியக் கப்பற்தரப்பு, ஐந்து மில்லியன் ரூபாய்களை நட்ட ஈடாக வழங்க வேண்டும் என்று சிறிலங்கா முன்னர் இந்தியக் கப்பல் நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தொடுத்திருந்தது.

இந்தியாவின் 'ஸ்ரேட் ஒப் நாகலாந்து' என்ற கப்பல் இக்கடற்கீழ் தொடு கம்பியை மோதி அறுத்தது என்றும்,இதனால் இலங்கைக்கான இணையத்தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது என்றும் சிறிலங்கா குற்றம் சுமத்தியிருந்தது.

எட்டு இலட்சம் பாவனையாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டார்கள், தமக்கு ஐந்து மில்லியன் ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா ரெலிகொம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

எனினும் நேரில் சென்று சம்பவம் நடைபெற்ற பகுதியினை இரு சாராரினதும் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆராய்ந்தபோது கடலில் கீழுள்ள தொடுகம்பி அறுந்ததாக நம்பப்படும் நேரத்தில், குறிப்பிட்ட இந்தியக்கப்பல் ஒன்பது கடற்கோள் மைல்கள் தள்ளியே பயணித்துக்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து வழக்கை மீண்டும் வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாக சிறிலங்கா சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தியக் கப்பலான 'ஸ்ரேட் ஒப் நாகலாந்து' என்ற கப்பல் நிறுவனத்தின் சார்பில், கொழும்பில் இயங்கும் முருகேசு நீலகண்டன் சட்டத்தரணிகள் ஆஜரானார்கள்.

இவர்கள் தமது நிறுவனத்தின்மேல் பதியப்பட்ட வழக்கின் காரணமாக ஏற்பட்ட தாமதம், இழப்புக்கள், கப்பலின் பெயருக்கு ஏற்பட்ட களங்கம் குறித்து தமது தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள் என்பது குறித்துக் கருத்துக்கூற மறுத்து விட்டார்கள்.

# ஜப்பானிலிருந்து சொகுசு வாகனங்கள் பா.உறுப்பினர்களுக்கு தருவிக்க முடிவு

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய சொகுசு வாகனங்கள் ஜப்பானிடமிருந்து கொள்வனவு செய்யப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை வழங்குமாறு அமைச்சரவையிடம் கோரப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும், முன்னர் தீர்மானித்தபடி இந்திய வாகனங்களைப் பெறுவதற்குப் பதிலாக புதிய ஜப்பானிய வாகனங்களை வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை

## தெற்காசிய ஒத்துழைப்பு அமைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லையென இலங்கையின் தெற்காசிய ஒத்துழைப்பிற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற 2004 தேசிய பெண்கள் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும், சிறிலங்காவின் நிர்வாகம் மற்றும் தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கைகளில் பெண்களின் பங்குபற்றலும் முடிவும் போதுமானதாக இல்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை தெற்காசிய ஒத்துழைப்பிற்கான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பற்மா இரட்ணாயக்கவே இந்தக் கருத்துக்களைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்; இதேவேளை ஆசிய பிராந்தியத்தில் இலங்கையிலேயே பெண்கள் அரசியலில் ஈடுபடும் வீதம் குறைவாக உள்ளதெனவும் இதேவேளை, ஆசியாவை எடுத்துக் கொண்டால் பங்களாதேஷில் 30 வீதமான பெண்களும், இந்தியாவில் 33 வீதமானோரும், நேபாளத்தில் 20 வீதமும், பாகிஸ்தானில் 33 வீதமான பெண்களும் அரசியலில் உள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர் சிறிலங்காவில் 1.97 வீதமான பெண்களே அரசியலில் உள்ளனர் என்றும் கூறினார்.


# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் அணைப்பில்

11 * 03 * 1972

தமிழ்த் தாயின் அணைப்பில்

28 * 08 * 1992



லெப்டினன்ட் மன்றவாணன்

கதிர்காமவேலன் சிறீகாந்தன்

(மீசாலை வடக்கு, வேம்பிராய், கொடிகாமம்.)

*அகிலமதில் நீ மறைந்து ஆண்டுகள் பன்னிரெண்டும்*
*காற்றாகப் பறந்ததடா காந்தா உன் நினைவுடனே*
*மன்றவாணன் பெயர் தாங்கி மாவீரர் வரிசையில் நீ...*
*கல்லறையில் உறங்குகின்றாய் கனவுகளைச் சுமந்தபடி*

இல.04, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி-10100)

குடும்பத்தினர்.

# பொதுமகனைத் தாக்கிய நீதிவான் மீது முறைப்பாடு

நீதிமன்ற நீதிவான் ஒருவர் பொதுமகன் ஒருவரைத் தாக்கியமை தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு முறையிடப்படவுள்ளது.

புதன் இரவு வாகன நெரிசல் நிறைந்த நேரத்தில் மாவடி பள்ளிப் பாலத்தில் வாகனம் ஒன்றினைச் செலுத்தி வந்த ஒருவரை வழிவிடுமாறு குறிப்பிட்ட மேலதிக நீதிவான் கேட்டுள்ளார். எனினும் அதனை செவிமடுக்காத நிலையில் சம்பந்தப்பட்ட பொதுமகனை நீதிவான் தாக்கியதுடன், அவரிடம் இருந்த வாகன அனுமதிப் பத்திரம் உட்படப் பல ஆவணங்களைப் போக்குவரத்துப் பொலிசாரிடம் ஒப்படைத்து குறிப்பிட்ட பொதுமகனைக கைது செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

## *அமரர் இராசேந்திரம் வரதராசா*

*(ஓய்வு பெற்ற வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரி)*

எமது தொழிலகங்களுக்குரிய பொறுப்பாளரின் தந்தை ஆகிய அமரர் இராசேந்திரம் வரதராசா அவர்களின் மறைவையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(5010)

**நகை வாணிபம்**
**பணிப்பாளர்கள், பொறுப்பாளர்கள், பணியாளர்கள், உற்பத்தியாளர்கள்.**

# குற்றச் செயல்களுக்கான ஆயத்தங்களைக் கண்டுபிடிக்க புதிய கருவி கண்டுபிடிப்பு

இன்று உலகெங்கும் குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இதனைக்கட்டுப்படுத்த பல்வேறு உபாயங்கள் கையாளப்பட்டு வருகின்ற போதும் அவை அனைத்தினதும் கண்களைக்கட்டிவிட்டு குற்றவாளிகள் தமது திறமையைக் காட்டி வருகின்றனர்.

தற்போது இதனைக்கட்டுப்படுத்தும் வழியைக் காண்பதற்கான முயற்சியை நாசா நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. நாசாவின் ஆய்வாளரான போல் மேயர் என்பவரின் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக 1996 ஆம் ஆண்டு அட்லண்டா ஒலிம்பிக் போட்டிகளின்போது நிகழ்ந்த குண்டு வெடிப்புத் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் குற்றவாளிகளைக் கண்டறியும் பொருட்டு நாசா நிறுவனம் பொலிசாரின் உதவியையும் நாடியுள்ளது.

நாசா நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள செய்மதியில் மேற்படி சம்பவம் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அவற்றை நன்கு ஆராய்ந்து அறியும் போது பொலிசாருக்கு அது பெரும் உதவியாக இருக்கும் என போல் மேயர் தெரிவித்துள்ளார். இச்செய்மதியைவிட மற்றுமொரு கருவியை நாசா நிறுவனம் தயாரித்துள்ளது. இக்கருவி தொலைக்காட்சியுடன் இணைந்து செயற்படக் கூடியதாகும். இக்கருவியை பரீட்சித்துப்பார்த்ததில் குற்றச் செயலில் ஈடுபடுவோரின் முன்கூட்டிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இக்கருவி விமானங்களின் கறுப்புப் பெட்டிக்கு ஒப்பானதாகும். இதன்மூலம் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மட்டுமன்றி அவர்களின் திட்டமிடல் நடவடிக்கைகள் என்பவற்றையும் அறிந்துகொள்ள முடியும். வீடுகளில் கணினி ஒன்று இருப்பின் அதன் மூலமாகவும் இதனை அறிய முடியும்.

இக்கருவியைச் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என நாசாநிறுவனம் தெரிவித்துள்ளது. வியாபார நோக்கத்துக்காக இதனைச் தயாரிக்கவும் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. எனினும் இதன்சான்றுகள் சட்டத்தின் முன் எற்றுக்கொள்ள முடியுமா? என்பது கேள்வியாக உள்ளது.

இக்கேள்விக்கான விடையை குறிப்பிட்ட நாடுகளின் கொள்கையாளர்களே தேடிக்கொள்ளவேண்டும். அதற்கான பொருத்தமான சட்டதிட்டங்களை வகுக்க அமெரிக்கா ஏற்கெனவே ஆரம்பித்துவிட்டது.

இக்கருவியின் பயன்பாட்டின் மூலம் பல குற்றச் செயல்களின் வெளிப்பாடுகளை அறிய முடிவது சாதகமாகியுள்ளது.

இக்கருவியினதும், தடுப்புப் பிரிவினரதும் அனுபவங்கள் இணையும்போது குற்றவாளிகளைப் பொலிசார் தமது வலையில் வீழ்த்துவது பெரிதான காரியமன்று என போல் மேயர் தெரிவித்துள்ளார். அத்துடன் இக்கருவி விரைவில் அனைத்து இடங்களிலும் பாவனைக்கு வரும் என்ற நம்பிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.




ஜப்பானின் 'இலத்திரனியல் அசுரன்' எனப்படும் 'சொனி' நிறுவனத்தின் ஊழியர் 'ஹனா யோகரோ' படம் பிடிக்கும் கருவியும், ஒலிப் பதிவு செய்யும் கருவியும் ஒருங்கிணைந்த சாதனமான "ஹாண்டிகாம் டீ.சீ.ஆர்-எச்.சி 1000" என்ற கருவியை காண்பிக்கின்றார்.
மூன்று 1.07 மெகா பிக்ஸன் சீ.சீ.டிக்களை உடைய இக்கருவியின் கச்சிதமான உடற்பாகம் ரோக்கியோவில் இந் நிறுவனத்தின் காட்சியறையில் உள்ளது.

## புல் துலக்காத சீனர்

சீன மக்களில் பெரும்பாலானோர் பற்தூரிகை (பிரஷ்) கொண்டு பல் துலக்குவதில்லை. சீனா முழுவதிலுமுள்ள 130 கோடி மக்களில் அதிகமானோர் கிராமப் புறங்களிலேயே வசிக்கின்றார்கள்.

இவர்கள் பற்தூரிகை கொண்டு பல் துலக்குவதில்லை. கைவிரல்களினாலேயே அதிகமானவர்கள் பல் துலக்குகின்றார்கள்.

அதற்கு அடுத்த தொகையினர் குச்சிகளினாலும், இன்னும் சிலர் துணிகளினாலும் பல் துலக்குகின்றனர்.

சில கிராம மக்கள் தண்ணீர் கொண்டு வாயைக் கொப்பளிப்பதோடு சரி, பற்களைத் தேய்கவே மாட்டார்கள்.

கொஞ்சம் வசதியானவர்கள் தண்ணீருக்குப் பதிலாக தேயிலைச் சாயத்தில் வாய் கொப்பளிக்கிறார்கள். இவர்களின் பற்கள் வெள்ளை நிறத்திற்குப் பதிலாக பச்சை நிறத்தில் காவி படிந்து காணப்படுகின்றது. ஆனால் இதற்கு அவர்கள் கொஞ்சம் கூடக் கவலைப்படுவதில்லை.

நகரத்தில் வசிப்பவர்களில் 90 வீதமானவர்கள் பற்தூரிகை வைத்திருக்கிறார்கள். ஆனால், தினந்தோறும் பாவிப்பதில்லை. என்றாவது ஒருநாள் பற்தூரிகை கொண்டு பல் துலக்குகிறார்கள். ஆய்வு ஒன்று இந்தத்தகவலை வெளியிட்டுள்ளது.

## செல்லிடத் தொலைபேசியும் தொழில்நுட்ப வளர்ச்சியும்

செல்லிடத் தொலைபேசியானது வேகமான வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. இன்று இருக்கும் தொலைபேசி நாளை பெறுமதியற்ற ஒன்றாகிவிடும். அத்துடன் வேறொரு புதிய கண்டுபிடிப்பு அறிமுகமாகும்

மூன்றாம் உலக நாடாகிய சிறிலங்கா போன்றவற்றில் செல்லிடத் தொலைபேசிகள் இன்றியமையாத ஒன்றாகிவிட்டன. எனினும் அவற்றை உபயோகிப்பது தொடர்பில் பல இன்னல்களும் தோன்றுகின்றன. உங்களின் தொலைபேசி எண்ணை ஒருவர் திருட்டுத்தனமாகப் பயன்படுத்துவதன் மூலம் உங்களின் பயன்பாடு குறைவாயிருப்பினும் செலுத்த வேண்டிய கட்டணம் அதிகமாக இருக்கும். காரணம் அந்த இன்னுமொருவர் உங்களின் தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி அலுவல்களை மேற்கொண்டிருப்பதே. எனினும், இந்தப் பிரச்சினைக்கும் நியூசிலாந்து உயர்தர மாணவர்கள் விடை கண்டுள்ளனர். இவர்கள் தயாரித்துள்ள புதிய செல்லிடத் தொலைபேசி இவ்வாறான நேர்மையற்ற செயலைக் கண்டுபிடிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்தொலைபேசியில் சிறிய மின் குமிழ்கள் நான்கு காணப்படுவதாகவும், இவற்றில் ஏதாவது ஒன்று எரியும் போது வேறொருவர் உங்களின் கட்டணத்தில் அவரது செல்போனைப் பயன்படுத்துகின்றார் என்பது புலனாகும் என்றும், இவ்வாறான தொலைபேசி மிக இலகுவில் விருத்தியடையும் என்றும் இதுவரை பல நூறு தொலைபேசிகள் விற்பனையாகிவிட்டதாகவும், தெரிவிக்கப்படுகிறது. இதன் விலை சுமார் 100 டொலர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



யப்பானின் ஹிற்றாச்சி நிறுவனப் பணியாளர் ஒருவர் மிகநவீன 'வின்டோஸ் CD நெற்றின் மாதிரி நகலைக் காண்பிக்கிறார். மெதனொல் குழாய் அதன் உச்சியில் உண்டு. நிறுவனத்தின் மிகப்பிந்திய இத்தொழில் நுட்ப சாதனம் டோக்கியோவில் கண்காட்சி யொன்றில் வைக்கப் பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஆண்களுக்கு விளையாட்டு, தொடர்பான செய்திகளை பரிமாறவும் விளையாடவும் ஏற்ற தொலைபேசிகள் தேவைப்படுவதாகவும், பெண்களுக்கு தொலைபேசி மூலம் இசையை இரசிக்கக் கூடிய வகையிலான தொலைபேசி ஒன்று உருவாக்கப்பட வேண்டிய அவசியமிருப்பதாகவும் அறிய முடிகிறது.

எனினும், இத்தொலைபேசிகள் மனிதனுக்குப் பாரிய நன்மைகளைத் தரவும், நேர விரயத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்ற அதேவேளை, பல பிரச்சினைகளையும் உருவாக்குகின்றன.

அதாவது, புகைப்படக் கருவியுடனான சில செல்லிடத் தொலைபேசிகள் மூலம் சில விஷமிகள் தகாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக பெண்கள் குளிக்கும்போதும், பாடசாலைகளில் நடைபெறும் உடற்பயிற்சிகளின்போதும் இதனைப் பாவித்து புகைப்படங்களை எடுத்து விற்பனை செய்யும் தொழில்களும் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

இதனால், பல ஐரோப்பிய நாடுகளில் இவ்வகைச் செல்போன்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இதனைவிட தற்போது புதிய தகவல் ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. கணினிகளைப் போன்று இவ்வகை செல்போன்களுக்குள்ளும் வைரஸ் கிருமிகள் புகத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளி வருகின்றன. 'கபிர்' எனப்படும் இவ்வைரஸ் செல்போனில் புகுந்ததும் "Caaride" என்ற சொல் செல்போன் திரையில் காணப்படும். தொலைபேசியைப் பயன்படுத்தும் போது இது தோன்றும். அத்துடன் இது ஏனைய தொலைபேசிகளுக்கும் தொற்றும். எனினும் இது செல்போன்களைப் பெரிதும் பாதிப்படைச் செய்யாது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புகையால் வரும் நோய் மூளையைப் பாதிக்கும்

புகை பிடிப்பதால் ஒட்சிசன் ஏற்றத்தாழ்வு காரணமாக மூளை செயற்படுவது பாதிக்கப்படும் என லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரி டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். புகை பிடிப்பது உடல் நலத்துக்கு தீங்கு என சிகரெட் பெட்டியில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்கள் கரிக்கோச்சி புகை விடுவது போல எப்போதும் வாயில் பீடி, சிகரெட் வைத்து புகைவிட்டுக் கொண்டிருக்கின்றனர். புகை பிடித்தால் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வரும். அதனால் நாளடைவில் மூளைக்கு ஒட்சிசன் செல்வதில் ஏற்றத்தாழ்வு ஏற்படும். ஒட்சிசன் ஏற்றத்தாழ்வு காரணமாக மூளை செயற்படுவது பாதிக்கப்படும். அந்த அபாய எச்சரிக்கையை லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரி டாக்டர்கள் வெளியிட்டுள்ளனர். இங்கிலாந்தே புகைத்தலில் முதலிடம் அது எங்களுக்கு உபதேசம்.



யப்பானின் மற்சுகூஷிதா மின்னியல் நிறுவனப் பணியாளர் ஹனேஹாஸ்கவர் புதிய கணினிக் குறிப்புப் புத்தகத்தைக் காண்பிக்கின்றார்.

இலகுவில் இணையத்துடன் தொடர்பை ஏற்படுத்தும் மென் பொருள் மற்றும் தொலைத்தொடர்பு செயன் முறையுடன் ஒரு மாத இலவச சார்ஜ்சுடன் டோக்கியோவில் உள்ள காட்சியறையில் பெறும் வசதி கொண்டது.

இணையத்தளத்துடன் 'வயர்லஸ் ஊடாக தொடர்பை ஏற்படுத்தவும், திறந்தவுடன் சிரமமில்லாது' நடமாடும் தொடர்பு கொள்ளவும் வசதி கொண்டது இந்தக் கணினிக் குறிப்புப் புத்தகம்.

## தெரிந்து கொள்ள

* பூமியிலே மிகவும் நீளமான மலைத்தொடர் கடலுக்கடியில் உள்ளது. அட்லாண்டிக்கடலுக்கடியில் MID-ATLANTIC RIDGE என்று அழைக்கப்படும் இந்த மலைத்தொடரின் மொத்த நீளம் 10.000 மைல்கள் ஆகும்.

*ஒட்டகம் நீர் அருந்தும் போது 15 நிமிடத்திற்குள் 20 கலன் தண்ணீரை உறிஞ்சி வைத்திருக்கும் ஆற்றல் கொண்டது. இதனாலேயே பாலை வனங்களில் அதனால் நீண்ட தூரம் பயணிக்க முடிகிறது.

* கியூபாவின் காடுகளிலுள்ள பல்லி இனத்தைச் சேர்ந்த அனாலிஸ் போர்குஸ். இது பச்சோந்தியின் குணத்தைக் கொண்டது. அதாவது சூழலின் தன்மைக்கேற்ப இது தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும். இது வெட்டுக்கிளிகளைப் பிடித்துச் சாப்பிடும்.

* அமெரிக்காவில் 5487 கிலோக்கிராம் எடையுடன் தயாரிக்கப்பட்ட கேக். இது உலகின் மிகப் பெரிய ஐசிங் கேக் என கின்னஸ் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐஸ்கிறீம் தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இச்சாதனை நிகழ்வு நடைபெற்றுள்ளது. நியூயோர்க்கிலுள்ள யூனியஸ் சதுக்கப் பூங்காவில் நடைபெற்ற இச்சாதனை நிகழ்வின் போதே சுமார் 19 அடி நீளமும் 09 அடி அகலமும் 02 அடி உயரமும் கொண்ட இக்கேக் தயாரிக்கப்பட்டது.

* அமாவாசையன்று பூமிக்கு சூரியனும், சந்திரனும் நேர்கோட்டில் வருகின்றன. இதனால் ஈர்ப்பு விசை உச்சத்தில் இருக்கும். எனவே பூகம்பம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

கடல் வெப்பநிலை தொடர்ந்து உயரும் நிலையில் இந்துமா சமுத்திரத்தில் உள்ள பவளப் பாறைத் தீவுகளை இழக்கக்கூடிய அபாயம் ஏற்படும் என விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகம் வெப்பமடைவதன் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் முருகைக் கற்களை மீட்க முடியாது போகலாம் என அவ் விஞ்ஞானி எச்சரித்துள்ளார்.

மொசாம்பிக் நாட்டின் வடபகுதியில் இருந்து இந்தோனேசியா வரையான பிராந்தியத்திலுள்ள பவளப் பாறைகளில் 50-98 வீதமானவை பூமி வெப்பமடைவதால் அழிந்துள்ளன.

## நீண்ட காலம் வாழ

அசைவம் குறைத்துச் சாப்பிட்டால் நீண்ட காலம் வாழ உதவு மென்று கண்டறியப்பட்டுள்ளது. சைவ உணவு சிறந்ததா? அசைவ உணவு சிறந்ததா? என்ற பட்டிமன்றக் கேள்வி நீண்ட காலமாகக் கேட்கப்பட்டு வருகிறது. அந்த நிலையில் அசைவ உணவு சிறிதளவு சாப்பிட்டால் அது நல்லது. சைவ உணவு நீண்ட காலம் வாழ உதவுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. ஜேர்மனியில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி மையம் இது தொடர்பான ஆராய்ச்சியை நடத்தியுள்ளது.

# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி-2004

## தொடர்ந்தும் அமெரிக்கா முதலிடத்தில்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின பதகக்ப் பட்டியலைப் பொறுத்தவரையில் ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் முதல் இடத்தில் இருக்க சீனா இரண்டாவது இடத்திலும் அவுஸ்திரேலியா மூன்றாவது இடத்திற்கும வந்துள்ளது. ரஷ்யா நான்காவது இடத்துக்கு முன்னேற ஜப்பான் 5ஆவது இடத்துக்கும் பின்தள்ளப்பட்டுள்ளது. ஜேர்மனி ஆறாவது இடத்தில் தொடர்ந்தும் இருக்கின்றது.

மேற்படி பெறுபேறுகள் நேற்று மாலைவரை வெளியானது. இன்றுடன் இரண்டு தினங்கள் இருப்பதால் பதக்கப்பட்டியலில் மாற்றங்கள் ஏற்படலாம்.

அனேகமாக இறுதிப் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதால் ஒலிம்பிக் போட்டிகள் விறுவிறுப்படைந்துள்ளன.

## அமெரிக்க அணிக்குத் தங்கம்



பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் தங்கம் வென்ற அமெரிக்க அணியினர்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் அமெரிக்க அ்ணி தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளது.

இறுதிப்போட்டியில் பிரேசில் அணியை 2-1 என்ற கோல் எண்ணிககையில் தோற்கடித்தது.

## ஜமெக்கா வீராங்கனை கேம்ப்பெலுக்கு 200 மீற்றரில் தங்கப்பதக்கம்



பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்கா வீராங்கனை வெரோனிகா கேம்ப்பெல் தங்கப் பதக்கம் வென்றார்.

28ஆவது ஒலிம்பிக் போட்டி கிரீஸ் நாட்டின் தலைநகர் எதென்சில் நடந்து வருகிறது. இதன் தடகளப் போட்டி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதில் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்கா வீராங்கனை வெரோனிகா கேம்ப்பெல் தங்கப்பதக்கம் வென்றார். அவர் பந்தயத் தூரத்தை 22.05 வினாடியில் கடந்தார். இந்தப் போட்டியில் அவர் பெற்ற 2ஆவது பதக்கம் இதுவாகும். 100 மீற்றர் ஓட்டத்தில் வெரோனிகா வெண்கலப் பதக்கம் பெற்றிருந்தார்.

அமெரிக்காவைச் சேர்ந்த அலைசனட பெலிக்ஸ் 22.18வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கமும், பகாமஸ் வீராங்கனை டெபி பெர்குசன் 22.30 வினாடியில் கடந்து வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.


பெண்களுக்கான சங்கிலிக்குண்டு எறிதலில் ரஷ்ய வீராங்கனை ஓல்காகுசென்கோவா தங்கப்பதக்கம் வென்றதோடு புதிய ஒலிம்பிக் சாதனையும் படைத்தார். அவர் 75.02 மீற்றர் தூரம் வீசினார். சிட்னி ஒலிம்பிக்கில் போலந்து வீராங்கனை காமிலா 71.10 மீற்றர் தூரம் எறிந்ததே சாதனையாக இருந்தது.

## எதென்ஸ்-2004


நேற்றைய போட்டிகளில் சில...



ஒலிம்பிக்,1000 மீற்றர் படகு வலித்தல் போட்டியில் தங்கம் வென்ற நோர்வேயின் எரிக் வெராஸ் லாசன்



படகு வலித்தல் CI 1000 மீற்றர் போட்டியில் தங்கம் வென்ற ஸ்பெயின் வீரர் டேவிட்கல்.



ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் தங்கம் வென்ற டொமினிக்கன் குடியரசின் பீலிக் ஸ்சன்செஸ்.




## பரபரப்பான ஆட்டத்தின் பின் வெண்கலப் பதக்கம் வென்றது ஜேர்மன்

எதென்ஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹொக்கி வெண்கலப்பதக்கத்தை ஜேர்மனி சுவீகரித்துக் கொண்டது.

நேற்று நள்ளிரவு நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் ஸ்பெயினை தோற்கடித்தது.

இதில் இரு அணிகளும் விட்டுக் கொடுக்காத ஆட்டத்தை வெளிப்படுத்தி தலா 3 கோல்களை போட்டு சமநிலையில் இருந்தன. இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க மேலதிக நேரம் வழங்கப்பட்டது இதில் ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் தங்கக்கோல் போட்டு வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்தது ஜேர்மனி.

1996 அட்லாண்டா மற்றும் 2000 சிட்னி ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற நெதர்லாந்து புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 3-2 என்ற கோல கணக்கில் ஜேர்மனியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 6-3 என்ற கணக்கில் ஸ்பெயினை வென்று இறுதிக்கு நுழைந்தது.முன்னதாக 5 முதல் 8 ஆவது இடத்துக்காக நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து 4-3 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வென்றது.

மற்ற ஆட்டங்களில் தென்னாபிரிக்கா 5-1 என்ற கோல் கணக்கில் எகிப்தை வென்றது. பிரிட்டன் 4-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனாவை வென்றது. இதன் மூலம் 9-10ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் தென்னாபிரிக்காவும் பிரிட்டனும் மோத உள்ளன. 11-12 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் ஆர்ஜென்டீனாவும் எகிப்தும் மோதவுள்ளன.

## முதல் தங்கத்தை வென்றது இஸ்ரேல்



ஒலிம்பிக்கில் இஸ்ரேல் முதல் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. புதன்கிழமை நடைபெற்ற பாய்மரப்படகுப் போட்டியில் கால்.்.பிரிட்மான் முதலிடம் பெற்று இஸ்ரேலுக்குத் தங்கப் பெருமை தேடிக் கொடுத்தார்.

தங்கப்பதக்கம் கிடைத்தது குறித்து இஸ்ரேல் பிரதமர் மோசோகத்சவ் மிகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். நாட்டு மக்களும் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

1952 இல் முதன்முதலாக ஒலிம்பிக்கில் நுழைந்த இஸ்ரேல் 40 ஆண்டுகளுக்குப் பிறகு பார்சிலோனா போட்டியில் முதல் பதக்கத்தைப் பெற்றது. கால்.்.பிரிட்மான் வென்றது 2 ஆவது பதக்கமாக அமைந்துள்ளது.

## சைக்கிள் ரேஸ் ரஷ்யா வெற்றி

சைக்கிள் ரேஸ்போட்டியில் ரஷ்யாவில் ஓல்காஸ் லியூசரேவா தங்கம் வென்றுள்ளார். ஒலிம்பிக் சைக்கிள் ரேஸ்போட்டிகள் நேற்று நடந்தன. "100 லேப்ரேஸ்"பிரிவில் ரஷ்யா வீராங்கனை ஓல்காஸ் லியூசரேவா 20 புள்ளிகளுடன் தங்கம் வென்றார்.

கடந்த சிட்னிஒலிம்பிக்கில் இவர் வெண்கலம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 14 புள்ளிகளுடன் மெக்சிக்கோவின் பெல்ம் மென்டஸ் வெள்ளியும், 12 புள்ளிகளுடன் கொலம்பியாவின் மரியாலூசியா வெண்கலமும் கைப்பற்றினர்.

## 400 மீற்றர் தடை ஓட்டம் கிரீஸ் வீராங்கனைக்குத் தங்கம்

பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டும் ஓட்டத்தில் கிரீஸ் வீராங்கனை பேனிஹல்கியா தங்கப் பதக்கம் வென்றார்அவர் பந்தயத் தூரத்தை 52.82 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்தார்.. ருமேனியாவைச் சேர்ந்த மனேலாச் 53.38 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும், உக்ரேனைச் சேர்ந்த அன்டிபோவா 53.44 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

## இந்திய ஹொக்கி வீரர்களுக்கு நடவடிக்கை

எதென்ஸ் ஒலிம்பிக் ஆண்கள் ஹொக்கிப் போட்டியில் இந்தியஅணி மோசமான தோல்வியைத் தழுவியது. இதுவரை 6 ஆட்டத்தில் மோதிய இந்திய அணி 4 ஆட்டத்தில தோற்றது. தோல்விக்கு புதிய பயிற்சியாளர் நமது வழக்கமான ஆட்ட முறையை மாற்றியதுதான் காரணம் என்று தன்ராஜ் புள்ளேயை, பல்ஜித்சிங் தில்லான் உட்பட வீரர்கள் கருத்துக் கூறியிருந்தனர்.

இந்திய அணியின் மோசமான தோல்விக்குப் பிறகு இந்திய ஹொக்கி பெடரேஷன் தலைவர் கேபிஎஸ்கில் முதல்முறையாக கருத்துத் தெரிவித்துள்ளார் ' அணியில் ஒழுங்கீனம் காணப்படுகிறது. அதனைக களைய கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் கூறினார்.

## நான்கு பேர் கைது

இலங்கையில் நடைபெறும் இலங்கை-தென்னாபிரிக்க அணிகள் இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி முடிவு குறித்து டெல்லி கிழக்குப் பகுதியில் சூதாட்டம் நடத்திய 4 பேரைப் பொலிசார் கைது செய்தனர். இவர்களிட மிருந்து போன், டி.வி,கணினி ஆகியவை பறிமுதல் செய்யப் பட்டது. ரூ.25 இலட்சம் அளவுக்கு சூதாட்டம் நடந்தது கண்டு பிடிக் கப்பட்டது.

## நெதர்லாந்து மும்முனை இறுதிப் போட்டி இன்று பாகிஸ்தான்-அவுஸ்.அணிகள் பலப்பரீட்சை

நெதர்லாந்தில் நடைபெற்று வந்த ஒரு நாள் போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே ஒரேயொரு போட்டி நடைபெற்ற நிலையில் பாகிஸ ்தான்

அவுஸ்திரேலியா அணிகள் இறுதிப் போட்டிக்குத தெரிவாகின.

இந்த வகையில் இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியை மழைகுழப்பாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை போட்டி ஏற்பாட்டாளர்கள் மீண்டும் ஒரு தடவை இப்போட்டியை நடத்துவோமா என்று கேட்டுள்ளனர். அதற்கு அவுஸ்திரேலியா மறுப்புத் தெரிவித்துள்ளது. எதிர்வரும் காலங்களில் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாகப் போட்டிகளில் கலந்து கொள்வதே இதற்குக் காரணம்.

இந்நிலையில் இன்றைய போட்டி மழையால் தடைப்படுமானால் எப்படி நிறைவடையப் போகிறது என்பது தெரியவில்லை.

-வட்டக்கச்சி லக்கிஸ்ரார் நடாத்தும் விளையாட்டுப் போட்டி-

## கால்பந்து கால்இறுதிப் போட்டிகள் இன்று வலைப்பந்துப் போட்டிகள் ஆரம்பம்

லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்துப் போட்டிகள் இரண்டாம் நாளான நேற்று சிறப்புற நடைபெற் றன.

நேற்று நடைபெற்ற நான்கு போட்டிகளில் ஸ்கந்தா அணி பரந் தன் மத்தி அணியையும், உழவர் ஒன்றிய அணி இளைஞர் வட்ட அணி யையும், உதயதாரகை அணி திருநகர் அணியையும், உருத்திரபுர அணி ஜெகமீப்பர் அணியையும் தோற்கடித்து அடுத்த சுற்று க்கு முன்னேறின.

ஜொனி வி.கழகம் இளந்தளிர் அணிகள் போட்டியின்றியும் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

இன்று கால்பந்து காலிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இதேவேளை பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகி அரையிறுதிப் போட்டிகள் வரை நடைபெறவுள்ளது. (12)

## பிரேசிலுக்கு தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக் பீச் கரப்பந்து ஆண்கள் இறுதிப் போட்டியில் பிரேசிலைச் சேர்ந்த ரிக்கார்டோ சான்டோஸ்-எமானுவேல் ஜோடி, 21-16, 21-15 என்ற நேர் செட்டில் ஸ்பெயினின் போஸ்மா-ஹெரெரா ஜோடியை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது.



கியூபாவை அரையிறுதியில் வென்ற சீனாவின் லியூயனான்.





100x4 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் அமெரிக்காவின் மரியன்ஸ் ஜோன்ஸ்



படகு வலிக்கும் ஜேர்மனிய வீரர்

## சிந்தனைக்கு



எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-08-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## குற்றச்சாட்டில் தவறென்ன?

"விடுதலைப்புலிகளுக்கு இடையிலான உள்ளகப் பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். புலிகளின் உள்ளக விவகாரங்களில் அரசாங்கமோ, படையினரோ தலையிடமாட்டார்கள். விடுதலைப்புலிகளுக்கும் பிரிந்து சென்ற குழுவினருக்கும் இருந்துவரும் கொலைகளுக்கும், வன்செயல்களுக்கும் அரசாங்கம் அல்லது படைகள் பொறுப்பேற்க வேண்டும் என்று புலிகள் குற்றம் சாட்டக்கூடாது" என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கூற்றுக்கள் பேச்சிற்கு அழகாக இருப்பினும் நடைமுறையில் அமுலாவதாக இல்லை.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுவது போன்று விடுதலைப்புலிகளுக்கும் - பிரிந்து போன குழுவிற்கும் இடையிலான பிரச்சினைகள் அவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் என்பது வெளிப்படையானதொன்று. ஆகையினால் அவர்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளட்டும் எனக் கூறுவது உயர்ந்ததொரு பண்பே.

ஆகையினால், இவ்விடயத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கூற்றுக்கள் வரவேற்கத்தக்கவையே. ஆனால், அவரின் கூற்றுக்களை நடைமுறைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை. ஏனெனில், அவரின் கூற்றிற்கு மாறான செயல்களே அரசதரப்பால் மேற்கொள்ளப்படுவதாகவுள்ளது.

எடுத்துக்காட்டாக, விடுதலைப்புலிகளுக்கும் - பிரிந்து சென்றோருக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பும், அரசாங்கமும் முட்டுக்கட்டையாகவுள்ளனர் என்பது நிராகரிக்கப்பட முடியாத உண்மையாகும்.

சிறிலங்கா இராணுவத் தரப்பும், அரசாங்கத் தரப்பும் விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்து சென்றவர்களுடனோ அன்றி வேறு தமிழ்க் குழுக்களுடனோ தொடர்பில்லை, அவர்களுக்கு உதவவில்லை அவர்களைப் புலிகளுக்கு எதிராகப் பயன்டுத்தவில்லை எனக் கூறிக் கொண்டாலும் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

ஏனெனில், இத்தமிழ்க் குழுக்கள் எவையுமே தனித்துவமாக இயங்குபவையாக இல்லை. அரசாங்கத்தின் நிதியுதவியுடனும், சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்புடன் இணைந்தோ அன்றி அவற்றின் பாதுகாப்புடனோ செயற்படுபவையாகவே உள்ளன. இந்நிலையில், விடுதலைப்புலிகள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது எவ்வாறு? அதிலும் குறிப்பாக, புலிகளுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளிலும், தமிழ் மக்களுக்கு எதிரான அழிவு நடவடிக்கையிலும் ஈடுபடும்போது பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது.

பிரிந்து சென்றவர்களுடனேயோ அன்றி ஏனைய குழுக்களுடனேயோ பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளப்படவேண்டுமானால், ஒன்று அவர்களுக்குச் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு உதவி அளித்தல் நிறுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாது உதவி அளித்துச் செயற்பட வைக்குமானால், பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படமாட்டாது. மாறாகப் பிரச்சினைகள் மேலும் தீவிரமடையவே வாய்ப்புண்டு.

இதைத் தவிர இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இவர்களை அனுமதித்தல் என்பது இவர்களுக்கு ஆயுதப் படைத்தரப்பு பாதுகாப்பு அளிக்க முற்பட்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. ஆகையினால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பவர்களுடன் அதற்கு வெளியில் இருந்தவாறு பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளுதல் முடியும்?

ஆகையினால், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியிருப்பது போன்று, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இடம்பெறும் கொலைகளுக்கும், வன்செயல்களுக்கும் அரசாங்கம் அல்லது இராணுவம் பொறுப்பேற்க வேண்டும் எனப் புலிகள் குற்றம் சாட்டக்கூடாது என்பது ஏற்கத்தக்கதல்ல.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளோ அன்றி இராணுவத்தின் பாதுகாப்புடனேயோ செயற்படும் தமிழ்க் குழுக்களுடனோ அன்றி புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களுடனோ இதில் யாருடன் இருப்பினும் சரி புலிகள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதானால், அரசாங்கமோ, ஆயுதப் படையோ சம்பந்தப்படாமல் இதனைத் தீர்த்து வைப்பது கடினமானதாகும். ஏனெனில், இவர்களின் நடவடிக்கைகளுடன் சிறிலங்காப் படைத் தரப்பு நேரடியாகத் தொடர்புபட்டதாகவுள்ளது.

ஆகையினால் இராணுவமோ, அரசாங்கமோ தலையிடமாட்டாது தலையிடவில்லை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கமாட்டாது. பிரச்சினைக்குரியவர்களைக் கொல்லைப்புறத்தில் வைத்துக் கொண்டு முன் வீட்டில் நின்று சமாதானம் பேசுவதோ, வன்முறைக்கும் எமக்கும் தொடர்பில்லை என்று கூறுவதோ எந்த வகையில் பொருந்தும்?

# இ.த.அ.சபை யோசனைகளை ஜே.வி.பி.நிராகரித்தது துரதிர்ஷ்ட வசமானது

### முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி நிராகரித்துள்ளமை துரதிர்ஷ்டவசமானது என முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளில் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்படாமை காரணமாக தாம் அதிருப்தி அடைந்துள்ள போதிலும் முஸ்லிம்களின் விவகாரம் குறித்து பேசித் தீர்வு காணப்படலாமென விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளதால் அது தொடர்பில் பேச தாம் தயாராக இருப்பதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து தரப்பினரும் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம் உறுதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அரசியல் உயர் பீட கூட்டத்தின் போது அனைத்து கட்சிகளுடனும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் குறித்து தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்த செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக யோசனைகளையோ அன்றி வேறு எந்த ஒரு தீர்வு யோசனைகளையோ எவரும் முற்றாக நிராகரிக்க முடியாது அது தொடர்பாக பேச்சு நடத்தப்பட வேண்டும் அதன் சாதக பாதக தன்மைகள் குறித்து விரிவாக ஆராயவேண்டும். அதன் பின்னரே ஒரு முடிவை பெற முடியும்.ஆனால் ஜே.வி.பியினர் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை நிராகரித்துள்ளனர் ஆனால் நிராகரிப்புக்குரிய காரணங்களை அவர்கள் தெளிவுபடுத்தவில்லை. அதேசமயம் விடுதலைப் புலிகளின் யோசனைகளுக்கு மாற்றாக வேறு எந்த யோசனைகளையும் ஜே.வி.பி முன்வைக்கவில்லை என்றும் ஹசன் அலி சுட்டிக்காட்டியுள்ளார். (32)

# சிறிலங்காவுக்கு வழங்கும் எரிபொருளுக்கு மானியம் வழங்குவது பற்றி ஈரான் ஆராய்வு

இலங்கைக்கு எரிபொருள் வழங்குவதில் மானிய உதவி அளிப்பது பற்றி ஈரானிய அரசு ஆராய்ந்து வருகிறது.

ஈரானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் கொழும்பில் நிதியமைச்சர் சரத் அமுனுகமவை நேற்றுச் சந்தித்த வேளை இதனைத் தெரிவித்துள்ளார்.அத்துடன் இதன் போது புதிதாக இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்து கொள்வது பற்றி ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# 2 ரூபாவேதன உயர்வு போதாதென தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

இரண்டு ரூபாய் சம்பள உயர்வை ஏற்காது தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். தொழிலில் இதுவரை தோட்டதொழிற்சங்கங்களுடன் இடம்பெற்றுள்ள பேச்சுக்களின் அடிப்படையில் முதலாளிமார் சம்மேளனம் தோட்ட தொழிலாளர்களுக்கு 2 ரூபா வேதன உயர்வை வழங்க முன்வந்துள்ளது.

எனினும் இதனை ஆட்சேபித்துள்ள தோட்ட தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களின் உதவி எதுவும் இன்றித் தாமே முன்வந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை வாழ்க்கைச் செலவுக்கேற்ப தோட்டத் தொழிலாள்களின் வேதனங்கள் உயர்த்தப்பட வேண்டும் என தோட்ட கைத்தொழில் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று தலவாக்கலை சென்ற் கூம்ஸ் தேயிலை ஆராய்ச்சி மையத்துக்கு விஜயம் செய்த அவர் அங்கு இடம்பெற்ற ஊடக மாநாட்டில் இந்தக்கருத்தை வெளியிட்டார்.

தற்போதைய நிலையில் முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான பேச்சுக்களில் இணக்கம் ஏற்படாமையை அடுத்து வேதன உயர்வு குறித்து எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.இந்த நிலையில் தாம் இதற்கு உரிய தீர்வைக்காண அமைச்சு மட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சா அனுர பிரியதர்சன தெரிவித்தார். (32)

# கத்தி முனையில் பெண்ணிடம் இரண்டு இறாத்தல் பாண் பறிப்பு

கத்தி முனையில் இரண்டு இறாத்தல் பாண் கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று கொழும்பில் இடம் பெற்றுள்ளது.கல்கிஸ்ஸ பகுதியில் வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணை வழிமறித்த ஒருவர் கத்தி ஒன்றைக் காண்பித்து அந்தப் பெண்ணை மிரட்டியதுடன் அவர் கையில் வைத்திருந்த இரண்டு இறாத்தல் பாணைப் பறித்துக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் மாற்றம்

ஜாதிக ஹெல உறுமய கட்சி தனது பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் மாற்றம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

அக்கட்சியின் தற்போதைய தலைவராக வண. அத்துரலிய ரத்தின தேரர் பதவிவகித்து வருகின்றார். இவர் அண்மையில் மேற்கொண்ட சில முடிவுகளினால் கட்சியின் உயர்பீட பௌத்த சங்கத்தினர் சிலர் விசனமடைந்துள்ள நிலையிலேயே பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் மாற்றம் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறதுபுதிய தலைவராக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் வண.எல்லாவெல மேதானந்ததேரர் நியமிக்கப்படக் கூடும் என நம்பப் படுவதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# அ.அ.திணைக்கள முன்னாள்ஆணையாளரை செப்-16வரை கைது செய்யநீதிமன்றம் தடை

அடையாள அட்டை திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் ரணசிங்க தாக்கல் செய்த மனுவினை மேல்முறையீட்டு நீதிமன்றம் எடுத்துக் கொண்டு அவரை செப்ரெம்பர் 16ஆம் திகதி வரை குற்றப்புலனாய்வுத்துறை கைது செய்யக்கூடா தென்ற தடையை மீண்டும் நீடித்துள்ளது. கொள்ளுப்பிட்டியில் நடந்த குண்டுவெடிப்புச் சம்ப வத்தில் சம்பந்தப்பட்டவருக்கும், அவருடன் வழிகாட்டியாக வந்த பெண்ணுக்கும் இவரின் தலைமையின் கீழ்தான் போலி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதாக குற்றப்புலனாய்வுத் துறையி னால் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# அ.உ.பா.வலயத்தில் கைதான இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு கெப்பிட்டிபொல அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் வைத்து கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ் யுவதிகளையும் எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.கைது செய்யப்பட்டவர்கள் நேற்று மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த சிவபாதரட்ணம் சிவமதி கருணா குழுவைச் சேர்ந்தவர் என கறுவாக்காடு காவல்துறையினர் தெரிவித்தனர்.

(32)

# துறைமுக பாதுகாப்புக்குறித்து ஆராய

# அமெ. அதிகாரிகள் இல. வருகை

(கொழும்பு)

துறைமுக பாதுகாப்புக் குறித்து ஆராய அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் குழு விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள பாரிய துறைமுகங்கள் பாதுகாப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயும் முகமாகவே அமெரிக்க அதிகாரிகள் இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரும் அமெரிக்க அதிகாரிகள் குழு துறைமுக அதிகாரிகள் மற்றும் துறைமுகப் பாதுகாப்புத் துறை மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்காவில் தயாராகும் கதிர்வீச்சுக்களை கண்டறியும் புதிய உணர்திறன் கருவிகள் கொழும்பு துறைமுகத்தில் பொருத்தபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

## யாழ்.வணிகர் கழக கண்காட்சியை அரச அதிபர் ஆரம்பித்து வைத்தார்

யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது இது மூன்று தினங்களுக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப வைபவத்தில் யாழ். அரசஅதிபர் பத்மநாதன் கலந்து கொண்டு நாடாவை வெட்டிக் கண்



காட்சியினை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற பொதுச்சுடர் ஏற்றும் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தொழிற்சங்க அமைப்புக்களின் இணைப்பாளர் இமையவன் மற்றும் யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள்மற்றும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பொதுச்சுடரேற்றினர். பின்னர்அங்கு இடம் பெற்ற கண்காட்சியினைப் பலர் பார்வையிட்டனர். தென்பகுதியிலிருந்து வருவிக்கப்பட்ட வர்த்தகப் பொருட்களும், உள்ளூர்வர்த்தகப் பொருட்களும், பார்வைக்கு வைக்கப்பட்டன. தென்பகுதியிலிருந்து வருகை தந்தவர்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் மிகுந்த அக்கறை செலுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. (27)

## மின் ஒழுக்கினால் தீ விபத்து

மின் ஒழுக்கினால் உடுப்பிட்டிப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளது.

உடுப்பிட்டி பொதுச்சந்தைப் பகுதியிலுள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்று நேற்று முன்தினம நள்ளிரவு தீப்பற்றி எரிந்துள்ளது. மேற்படி விபத்து தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (27)

## கண்டெடுப்பு

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் தர்மபுரத்திற்கும் புளியம் பொக்கணைச் சந்திக்குமிடையில் தமிழீழ காவல்துறையினரால் ஒரு சிறு பாசல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் பொன்னுத்துரை புஸ்பராணி 08ஆம் கட்டை, அக்கராயன். என்பவரது அடையாள அட்டை இருந்துள்ளது. எனவே உரியவர் தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்துடன் தொடர்பு கொண்டு பொருளைப் பெற்றுக் கொள்ளவும்.

# எதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெங்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 28 | 32 | 25 | 85 |
| ரஷ்யா | 15 | 21 | 25 | 61 |
| சீனா | 25 | 17 | 13 | 55 |
| அவுஸ்திரேலியா | 16 | 11 | 16 | 43 |
| ஜேர்மனி | 12 | 13 | 18 | 43 |
| ஜப்பான் | 15 | 09 | 10 | 34 |
| பிரான்ஸ் | 10 | 07 | 10 | 27 |
| பிரிட்டன் | 07 | 08 | 11 | 26 |
| தென்கொரியா | 08 | 10 | 07 | 25 |
| இத்தாலி | 09 | 07 | 08 | 24 |
| நெதர்லாந்து | 04 | 08 | 08 | 20 |
| உக்ரேன் | 08 | 04 | 07 | 19 |
| ருமேனியா | 08 | 05 | 05 | 18 |
| ஸ்பெயின் | 03 | 09 | 05 | 17 |
| ஹங்கேரி | 06 | 07 | 03 | 16 |
| கிரீஸ் | 06 | 04 | 03 | 13 |
| கயூவா | 02 | 04 | 07 | 13 |
| பெலாரஸ் | 02 | 03 | 07 | 12 |
| பல்கேரியா | 02 | 01 | 08 | 11 |
| போலந்து | 03 | 02 | 04 | 09 |
| கனடா | 02 | 05 | 02 | 09 |
| செக்குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| துருக்கி | 03 | 01 | 02 | 06 |
| பிரேசில் | 02 | 02 | 02 | 06 |
| சிலோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| தாய்லாந்து | 02 | 00 | 04 | 06 |
| ஆஸ்திரியா | 01 | 04 | 01 | 06 |
| கென்யா | 01 | 04 | 01 | 06 |
| டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| நோர்வே | 04 | 00 | 01 | 05 |
| நியூசிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| சுவிற்சர்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| அஸ்ரமஜான் | 01 | 00 | 04 | 05 |
| கஜகிஸ்தான் | 00 | 02 | 03 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 02 | 00 | 04 |

## திருமலையில் புலிகளால் பிடிக்கப்பட்ட ஊர்காவல் படையினரை உறவினர் பார்வையிட்டனர்

திருக்கோணமலை திரியாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக ஆயுதங்களுடன் உள்நுழைந்த போது, தமிழீழ விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரும் நேற்று அவர்களின் உறவினர்களைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு திருக்கோணமலை சம்பூர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி பற்றி முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திருக்கோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் கலந்து கொண்டார். இம்மாதம் 10ஆம் திகதி சட்டவிரோதமாக ஆயுதங்களுடன் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்ட போது அவர்களுடன் கூட இருந்த ஐந்து பொதுமக்களும் விடுவிக்கப்பட்டனர். ஏனைய இருவரும் நேற்று தமிழீழக் காவல்துறை ஊடாக தமிழீழ நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த ஊர்காவல்த்துறையினர் இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடு தொடாபாக தமது மகிழ்சசியினை வெளியிட்டனர்.

### ஐ.தே.க....

ஹெல்கேசன் மற்றும் எரிக் சூல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்து பேசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இடைநிறுத்தப் பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியானது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க தீர்மானித்துள்ளமை குறித்து மிலிந்த மொறகொட நோர்வே பிரதிநிதிகளுக்கு எடுத்து விளக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

### சிறிலங்காவை...

சூல்ஹெய்ம் பல விடுதலைப் புலிகளை நோர்வேக்கு பயிற்சிக்கு அழைத்துச் செல்வதாக வெளிவந்த செய்தியையும் குறிப்பிட்டு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (32)

### மாதகல்...

ஏனைய மாவீரர்களினதும் உருவப்படம் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தி மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில் இருந்து பாண்ட் வாத்திய இசை முழங்க மாதகல் பிள்ளையார் கோவிலடி இளைஞர் அரங்கத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. இதைத் தொடர்ந்து ஈகச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி ஏற்றிவைக்க, தேசியக்கொடியைச் சண்டிலிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் அன்பாளன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து இராஜனின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். அதைத்தொடர்ந்து ஏனைய மாவீரர்களுக்கு அவர்களின் உறவினர்கள் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து அங்கு கலந்துகொண்ட அனைவரும் மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகளாக அஞ்சலி உரைகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

லெப்டினனட் கேணல் ராஜன் அவர்களின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று எழுச்சியுடன் கிளிநொச்சியில் நடைபெற்றது.

லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவினரின் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்நிகழ்வின் பொதுச்சுடரினைத் தூயவன் அரச அறிவியல் கல்லூரிப் பொறுப்பாளா அ.பார்த்தீபன் அவர்கள் ஏற்றிவைக்கத் தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் லெப்.கேணல் ராஜன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத்தளபதி லெப்டினன்ட் கேணல நகுலன் அவர்கள் ஈகச்சுடரினை ஏற்றி மலர்மாலையினை அணிவித்தார். தொடர்ந்து கல்விப்பிரிவிலிருந்து களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு பொறுப்பாளர்கள் மலர்மாலைகளை அணிவித்தனர். லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவு பொறுப்பாளர் கீதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாள்ஸ் அன்ரனி சிறப்புத்தளபதி லெப்.கேணல நகுலன் அவர்கள் நினைவுரையினை நிகழ்த்தினார். (செ)

### பாராளு...

ளின் கட்டுப்பாட்டுப்பகுதியினுள செல்ல முற்பட்டவேளையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவர் பயணித்த வாகனத்திலிருந்து இறக்கப்பட்ட அவர் அங்கு அமைந்துள்ள இராணுவச்சோதனை அரணில் பெயரினைப் பதிவு செய்யுமாறு படையினரால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். தான் ஒரு பாராளுமன்ற உறுப்பினரெனவும், இவ்வாறான பதிவினை மேற்கொள்ளும் உரிமை படையினருக்கு இல்லையெனவும் அவர் அங்கு பிரஸ்தாபித்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து அவருடன் கூடப் பயணித்த அவர்களது குடும்பத்தவர்கள் விபரங்களை எழுத்தில் தருமாறு தன்னைப் படைஅதிகாரிகள் நிர்ப்பந்தித்ததாகவும், அதையடுத்து தமிழ்மொழியில் விபரங்களைத் தான் சமர்ப்பித்தாகவும் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

ஆயினும் தமக்கு தமிழ்தெரியாதெனக்கூறிப் படையினர் அதனை நிராகரித்தாகவும், தெரிவித்த மா.க.ஈழவேந்தன் சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக அங்கு வைத் துப் படையினர் திட்டமிட்டுத் தாமதித்தாகவும் குற்றஞ்சாட் யுள்ளார்.

எனினும் இவ்விடயம் தொடர்பாக பிரதமர் கவனத்திற்குக் கொண்டு வரப்போவதாகத் தான் அறிவித்ததையடுத்து படைஉயரதிகாரிகளின் தலையீட்டினையடுத்துத் தான் பயணிக்க அனுமதிக்கப்பட்டதாகவும மேலும் அவர் தெரிவித்தார். (27)

### கனேடிய...

ரணில் அரசிடம் கையளித்ததாகவும் குறிப்பிட்டார். இருப்பினும், ரணில் அரசு தமது இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக அலகை ஆராய்வதற்கு முன்னதாகவே, சந்திரிகா பல அரசியல் குழப்ப நிலையைத் தோற்றுவித்ததாலும் அதற்குப் பின்னர் உருவான அரசியல் மாற்றங்களாலும், தற்போது தெற்கில் நமது இடைக்காலத் தீர்வு குறித்து தவறான பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமது சமாதான முயற்சிகளில் ஆர்வத்துடனேயே இருக்கிறார்கள். கொழும்பு அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நோர்வே பிரதி நிதிகளுக்கு ஒரே குரலில் தங்களது விருப்பத்தைத் தெரிவித்து அவர்களை மீண்டும் சமரச முயற்சிகளை மேற்கொள்ளப் பணிக்க வேண்டுமென்பதே தங்கள் விருப்பம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.தற்போதைய நிலையில், இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க சமஷ்டி அமைப்பு முறையே சிறந்ததென்றும், இன நெருக்கடிக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகள் மிகவும் ஆர்வமாக இருப்பதாகவும் பொப்ரே பின்னர் கருத்துக் கூறியுள்ளார்.

### நோர்வே...

யக நாடொன்றில் இராணுவக் கட்டுப்பாட்டு முறை என்பன பற்றி அறிந்து கொள்வதாக அமைந்திருந்தது.

2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட ஆறாவது சுற்று சமாதான பேச்சுவார்த்தைகளில் புலிகள் அளித்த உறுதிமொழிக்கு அமைய இச் சுற்றுப்பயணம் இடம்பெற்றதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. அப்போது புலிகளின் சமாதானப் பேச்சு வார்தகைளில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வொன்றை ஆராயும் வகையில் அரசியல் விவகாரங்களை அறிந்து கொள்ளும் நோக்குடன் இச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டனர். பத்திரிகைகளில் கூறப்பட்டரேனா இராணுவ முகாம் விஜயம் நான்கு மணித்தியாலங்கள் நீடித்தன. அப்போது அந்த சந்திப்பில் நோர்வே படையினர் அமைதிகாக்கும் பணியிலும், மற்றும் சர்வதேச அமைதி காக்கும் பணிக்கும் எவ்வாறு தம்மை தயார்படுத்திக் கொள்கிறார்கள் என்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது. அப்போது பத்திரிகைகளில் வெளியான செய்திகள் விரிவான செய்திகளாக வெளியிடப்பட்டன என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவிக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து அவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.